
# நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

91/1





ஓங்கார வடிவான மயிலாகி வா!
உன்பேரைச் சொல்சேவல் கொடியாகி வா!
பாங்கான தமிழ்ஞானப் பழமாக வா!
பக்தர்க்குத் தித்திக்கும் சிவமேநீ வா!

நவம்பர் 1985

உ
சிவமயம்



# நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 4
ஒலி 10

குரோதன
ஐப்பசி

நவம்பர்
1985

தன்னந் தனிநின் றதுதான் அறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ?
மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னம் களையும் கிருபைச் சுடரே!
— கந்தர் அநுபூதி


கௌரவ ஆசிரியர் :
லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர் :
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர் :
சுப. அ. நடராசன் செட்டியார்

அலுவலகம் :
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001.
தொலைபேசி : p. p. 26668

தனி இதழ் ரூ. 1-25 ✤ ஆண்டுச் சந்தா ரூ. 15-00



# காணக் கிடைக்காத காட்சி!



அமராவதி புதூர் மகளிர் இல்லத்தின் கட்டிடத் திறப்பு விழா 1—2—1943 அன்று நடைபெற்றபோது எடுக்கப்பெற்ற அரிய நிழற் படம் இது.

உட்கார்ந்திருப்பவர்கள்: (இடமிருந்து வலமாக) 1. ராம குமசு. குமரப்ப செட்டியார், பலவான்குடி (மகன் கும. வள்ளியப்பனுடன்) 2. தெரியவில்லை 3. எம். எஸ். ஏஎம் பழநியப்ப செட்டியார், காரைக் குடி. 4. மெ. செ மெ. மெய்யப்ப செட்டியார், காரைக்குடி 5. ராஜா சர் அண்ணாமலை செட்டியார் (கட்டிடத் திறப்பாளர்) 6. சி. மு. அரு. நாராயணன் செட்டியார், காரைக்குடி 7. அ. பழ பழநியப்ப செட்டி யார், ஆவினிப்பட்டி. 8 ராம கும. சு. வள்ளியம்மை ஆச்சி. 9. அ. பழ. பழ. தாயார் 10. மீனாட்சி ஆச்சி, ஆ. முத்துப்பட்டணம்.

நிற்பவர்கள்: (இடமிருந்து வலமாக) 1, 2. தெரியவில்லை 3. பெ. லெ. லெட்சுமணன் செட்டியார், ஆத்தங்குடி. 4. இராமநாதன் செட்டியார், ஆ. முத்துப்பட்டணம். 5. அ. லெ லெட்சுமணன் செட்டி யார். 6. சொ. முருகப்பா. 7. கு. ராம ப. மு. முத்தையா செட்டியார் மகன் மு. சிதம்பரத்துடன்- 8. பெ. மு. சுப்பையா செட்டியார். ஆத்தங் குடி, 9. ராம. சு. லெ. சின்ன சுப்பிரமணியன் செட்டியார், கோனபட்டு 10. மு. மரகதவல்லி அம்மையார் (சொ. முருகப்பாவின் துணைவியார்)

படம் உதவி : திரு. கேஎம். வள்ளியப்பன், பலவான்குடி

20, 30 ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பெற்ற, நம்மவர் தொடர்பான அரிய புகைப்படங்கள் இப் பகுதிக்கு வரவேற்கப்படு கின்றன. புகைப் படங்களைப் பெற்றிருப்போர் அவற்றை எமக்கு அனுப்பி உதவ வேண்டுகிறோம். அனுப்பிய புகைப்படங்கள் திரும் பத் தேவைப்பட்டால் அவற்றை நாங்கள் உரியவர்களுக்குப் பத்தி ரமாக அனுப்பி வைக்கிறோம்.

— ஆசிரியர்

## ஆலயத் தூய்மைப் பராமரிப்புப் பணியில் நகரத்தார்!

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஆலயத் தூய்மைப் பராமரிப்புப் பணி 15—9—85 அன்று தமிழக அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்எம் வீரப்பன் அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது.

அன்று முதல் மதுரை மாநகரில் உள்ள 15க்கும் மேற்பட்ட பொது அமைப்புகள் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தூய்மைப் பராமரிப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றன.

அதுபோல் மதுரை நகரத்தார் சங்கமும் 1—10—85, 16—10—85, 1—11—85 ஆகிய தினங்களில் திருக்கோயிலின் சுவாமி சன்னதியின் முதல் சுற்றில் தூய்மைப் பராமரிப்புப் பணியை மேற்கொண்டது. இது போல் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1, 16 தேதிகளில் காலை 7-00 மணி முதல் 9-00 மணி வரை இத் தூய்மைப் பராமரிப்புப் பணி நடைபெறும்

## வி. என். சிடி. மலேசியா பயணம்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக் கோயிலின் தக்கார் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் 29—10—85 அன்று சென்னையிலிருந்து மலேசியா நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் 15—11—85 வாக்கில் தாயகம் திரும்புவார்கள்.



மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் 16—10—85 அன்று நகரத்தார் சங்கம் சார்பாக ஆலயத் தூய்மைப் பராமரிப்புப் பணியில் ஈடுபட்ட திரு. வி என். சிடி. (தக்கார்) திரு. எம். சிஎன். மாணிக்கம் (சங்கச் செயலாளர்) மற்றும் நகரத்தார் பெருமக்கள்.

# திருக்குட நன்னீராட்டு மலர் வெளியீட்டு விழா!

நாட்டரசன்கோட்டை அருள் தரு சிவகாமி அம்மன் உடனுய அருள்தரு கரிகால சோழீஸ்வரர் திருக்கோயிலின் திருக்குட நன்னீ ராட்டு விழா 2—9—85 அன்று சிறப்புற நடந்தேறியது.

அதனையொட்டி 17—10—85 அன்று அங்கு மண்டலாபிஷேக மும் சிறப்புற நடைபெற்றது.

அன்று மாலையில் திருக்குட நன்னீராட்டு விழா மலர் வெளி யிடப்பெற்றது. மதுரை அருள் மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக் கோயிலின் தக்காரும் நமது இத ழின் ஆசிரியருமான வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் மலரின் முதல் பிரதியை வெளி யிட, அதை நாட்டரசன்கோட்டை வெ. கண. கண கண்ணப்ப செட் டியாரவர்கள் பெற்றுக்கொண் டார்கள்.

முன்னதாக திரு. வெ. வயி. இராமநாதன் செட்டியார் இறை வணக்கம் பாட திரு. சுப இராம. சுப, இராமநாதன் செட்டியார் வரவேற்புரை நிகழ்த்தினர். சுப. ராம. மெ. நடராஜன் செட்டியார வர்கள் தலைமையுரை ஆற்றினர் கள். திரு. நா. சே. நாராயணன் மலர் விளக்கமளித்தார் திருவாளர் கள் கயி, ஆறு. ஞா ஆறுமுகம் செட்டியார், ஆடிட்டர் ஒய். சத் தியமூர்த்தி, சுப. சுப்பிரமணியன் செட்டியார் ஆகியோர் உரையாற் றினர். திரு. சோம. வெள்ளையப் பன் நன்றி கூறினர்.

இத் திருக்குட நன்னீராட்டு விழாவிற்கு அமரர் வெ. கண, கண்ணப்ப செட்டியார் அவர்கள் தலைவராகவும், சுப. ராம. மெ. நடராஜன் செட்டியார் அவர்கள் துணைத் தலைவராகவும் ராம. சோம. வெள்ளையப்ப செட்டியார் அவர்கள் செயலாளராகவும் சேவு. கி. வே. ஆவிச்சி செட்டியார் அவர்கள் பொருளாளராகவும் இருந்து சிறப்புறச் செய்தார்கள்.

இத் திருக்குட நன்னீராட்டு விழா மலர், நன்னீராட்டு விழா மலர்களுக்கே சிகரமாய் நல்ல பல செய்திகளை. கட்டுரைகளை அரிய விஷயங்களைக் கொண்டு விளங்கு கிறது.

இம் மலருக்கு திரு. சுப. இராம. சுப. இராமநாதன் செட் டியார் பதிப்பாசிரியராகவும் திரு. நா. சே. நாராயணன் துணைப் பதிப்பாசிரியராகவும் இருந்து சிறப்பாக உருவாக்கி யிருக்கிறார்கள்.

# எனது வெளிநாட்டு அனுபவங்கள்



**வி.என்.சிதம்பரம்**

நான் அண்மையில் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்று திரும்பியபோது, எனது வெளிநாட்டு அனுபவங்களை எழுதி, அதை ஒரு நூலாக வெளியிட வேண்டுமென்று நமது ''நகரத்தார் குரல்'' இதழின் உதவி ஆசிரியர் எல். சுந்தரம் அவர்கள் அன்போடு கேட்டுக் கொண்டார்கள். நானும் இரண்டு முறை அந் நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் சென்று வந்த போதிலும் '' அது சமயம் குறிப்பு எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை'' என்று கூறினேன். ''இருக்கிற நினைவாற்றலில் அவைகளைப் பற்றிச் சில கட்டுரைகளாவது எழுதித் தாருங்கள். அவற்றை ''நகரத்தார் குர''லில் வெளியிட வேண்டும்'' என் அன்புக் கட்டளையிட்டார்கள். இதன் தொடர்பாக செப் '85 இதழில் அறிவிப்பு ஒன்றும் வெளியிட்டுவிட்டார்கள். அதன் விளைவாக கட்டுரையை எழுதத் தொடங்கியபோது அதற்கு என்ன தலைப்புக் கொடுக்கலாம் என்று சிந்தித்தோம். அவர்கள் சில தலைப்புகளைக் குறிப்பிட்டார்கள். நான் சிலவற்றைக் கூறினேன். இறுதியில் '' எனது வெளிநாட்டு அனுபவங்கள்'' என்ற தலைப்பில் எழுதலாம் என்ற முடிவுக்கு வந்தோம். ஆகவே சிறு வயது முதல் எனது வெளிநாட்டு அனுபவங்களைத் தொகுத்து எழுத முற்பட்டுள்ளேன். இக் கட்டுரைகளை முக்கியமாக எழுத ஆசைப்பட்டதே எனக்கு உதவி செய்தவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.

## இலங்கைப் பயணம்

எனது 12 ஆவது வயதில் (1942ல்) நான் இலங்கைக்குச் சென்றேன். அப்போது எங்களுக்குக் கூட்டாக இலங்கையில் ஒரு தேயிலைத் தோட்டம் இருந்தது. அதில் மேலாளராக எங்கள் சின்ன ஐயா மாப்பிள்ளை குருவிக்கொண்டான்பட்டி கும. அழகப்ப செட்டியார் அவர்கள் பணிபுரிந்து வந்தார்கள். அவர்களுக்குச் செய்கோனில் சொந்தமாகக்கடை உண்டு. அவர்கள் மிகவும் அன்பானவர்கள்; அமைதியானவர்கள்; நற்பண்பு நிறைந்தவர்கள்.

அவர்கள் இலங்கையை ஒரு மாத காலம் எனக்குச் சுற்றிக் காண்பித்தார்கள். அதன்படி கொழும்பு, கண்டி, கதிர்காமம், பதுளை, யாழ்ப்பாணம், அனுராதபுரம், நுவரேலியா முதலிய இடங்களைப் பார்த்தேன். கொழும்பு நகரில் அப்போது நகாத்தார் கடைகள் அதிகம் இருந்தன. Sea Streetக்கு 'செட்டியார் தெரு' (அல்லது செட்டித் தெரு) என்று பெயர். செட்டியார் தெருவில் நகரத்தார்கள் அதிக அளவில் வணிகம் செய்து வந்தனர், லேவாதேவித் தொழில் செய்து வந்ததோடு தென்னை, ரப்பர், தேயிலைத்


தோட்ட அதிபர்களாகவும் இருந்தனர். மேலும் பல தொழில்கள் கள் செய்து வந்ததோடு பல சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் இருந்தனர்.

கொழும்பு நகரில் பழைய கதிரேசன் கோயில் புதுக் கதிரேசன் கோயில் என்று இரண்டு கோயில்கள், கண்டியில் வரலாற்றுப் புகழ் மிக்க புத்தரின் கோயில் இருக்கிறது. புத்தரின் பல் அங்கு இருக்கிறது. ஆண்டு தோறும் அங்கு விழா எடுக்கிறார்கள். பெரிய பூந்தோட்டமும் ஏரியும் இருக்கின்றன. நுவரேலியா, 7,000 அடிகள் உயரமுள்ள மலைவாசஸ்தலம். அது கோடைக்கானல்போல் இருக்கிறது. கதிர்காமத்தில் முருகன் கோயிலில் திரை போடப்பட்டிருக்கும். உருவத்தைப் பார்க்க முடியாது. உள்ளே சுப்பிரமணியர் இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கு சூடப் புகை மிக அதிகமாக இருக்கும். திரிகோணமலையில் 7 கிணறுகள் உள்ளன ஒன்றில் தண்ணீர் சூடாகவும் ஒன்றில் குளிர்ந்த நீராகவும் இருக்கிறது. இலங்கை சிறிய நாடானாலும் தேயிலை ஏற்றுமதி அங்கு அதிகம்.

1958ல் நான் மலேசியா சென்றபோது மீண்டும் இலங்கை வழியாகச் சென்றேன். மதுரை நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவர் பனையப்பட்டி சுப. அ. நடராஜன் செட்டியார் அவர்கள் எனக்கு இரண்டு நாட்கள் கொழும்பு நகரைச் சுற்றிக் காண்பித்தார்கள்.

மீண்டும் 1982 ஆம் ஆண்டு அகில உலக இந்து சமய மாநாட்டிற்கு இலங்கைக்கு குடும்பத்துடன் சென்று வந்தேன்.

( வளரும் )



மத்திய அரசின் துணை அமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு 2—10—85 அன்று வருகை தந்தபோது ஆலயத் தக்கார் வி. என்: சிதம்பரம் செட்டியார் அவர்கள் வரவேற்ற காட்சி.

எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள்

எமது கைவசம் உள்ள படங்கள்:

நூறாவது நாள், 24மணி நேரம், வெள்ளை புறா ஒன்று, வம்ச விளக்கு, ஈட்டி நவக்கிரக நாயகி, நாம் இருவர், இளமை நாடோடி மன்னன், Shaolin Vs Ninja (ஆங்கிலம்)

## செல்வ முருகன் பிக்சர்ஸ்

51-52, மேலப்பாண்டியன் அகிழ் தெரு
மதுரை - 625 001.

---

தந்தி: "சொக்கர் சிட்" உ போன்: 34584

## ஸ்ரீ சொக்கேசர் சிட் பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

தபால் பெட்டி எண்: 106

65, தெற்காவணி மூல வீதி, மதுரை-1.

உங்களின் வளமான எதிர்காலத்திற்கு எங்கள் ஏலச்சீட்டுகளில் சேர்ந்து பயனடையுங்கள். எங்களிடம் ரூ. 10,000முதல் ரூ. 2,00,000 வரை ஏலச் சீட்டுகள் உள்ளன.

---

அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

## GIRI LAKSHMI PHARMA

6, Jadamuni Kovil Street
MADURAI - 625 001.

மென்சஸுக்கு — Clearil
டயோரியாவுக்கு — D–Arrest
காய்ச்சலுக்கு — Sugazin
இருமலுக்கு — Cofcap

பயன்படுத்துங்கள்

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்



உ
சிவமயம்

சிவத்திரு KM. S.
சுப்பிரமணியன்
செட்டியார் M, A..
"தமிழகம்"
பலவான்குடி.

தோற்றம்: 15-10-1921 மறைவு: 29-10-1985

## அனைவருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா !

# சபரிமலைப் பயணம்

சபரிமலைப் பயணம் சென்று வருவதற்கு நாங்கள் கீழ்க்கண்ட தேதிகளில் ஏற்பாடு செய்துள்ளோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 1-12-85 to | 3-12-85 | 3 | நாட்கள் | ரூ. 175-00 |
| 2. | 8-12-85 to | 11-12-85 | 4 | ,, | ரூ. 230-00 |
| 3. | 12-12-85 to | 14-12-85 | 3 | ,, | ரூ. 175-00 |
| 4. | 12-12-85 to | 15-12-85 | 4 | ,, | ரூ. 230-00 |
| 5. | 19-12-85 to | 21-12-85 | 3 | ,, | ரூ. 175-00 |
| 6. | 19-12-85 to | 22-12-85 | 4 | ,, | ரூ. 230-00 |
| 7. | 24-12-85 to | 26-12-85 | 3 | ,, | ரூ. 175-00 |
| 8. | 6-1-86 to | 8-1-86 | 3 | ,, | ரூ. 175-00 |
| 9. | 6-1-86 to | 9-1-86 | 4 | ,, | ரூ. 230-00 |
| 10. | 11-1-86 to | 16-1-86 | 6 | ,, | ரூ. 310-00 |
| 11. | 18-1-86 to | 20-1-86 | 3 | ,, | ரூ. 175-00 |

அன்புகூர்ந்து முன்பணமாக ரூ. 75-00 வீதம் அனுப்பிவைத்து இடத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

## சுபம் டிராவல் ஏஜன்ஸி

226, நாயக்கர் புதுத் தெரு
*மதுரை-625 001.*
தொலைபேசி எண்: 22712
Prop : *சொ. சுப்பிரமணியம்*

L.F.C. L.T.C.யில் வருபவர்களுக்குச் சான்றிதழ் வழங்குகிறோம்.

# பிள்ளையார்பட்டிக் கோயில் : சில தகவல்கள்!

ஃ நகரக்கோயில்களுள் ஒன்ருன பிள்ளையார்பட்டிக் கோயில் காலத்தால் பழமையானது. இது 1600 ஆண்டுகளுக்கு முன்பு முதலாம் மகேந்திரவர்மன் அல்லது முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் ஏற்பட்டதென வரலாறு கூறுகிறது.

ஃ பிள்ளையார்பட்டிக்கு எருக்காட்டூர், மருதங்குடி. திருவீங்கைக்குடி, இராசநாராயணபுரம். தென்மருதூர், கணேசபுரம் போன்ற பல பெயர்கள் உண்டு.

ஃ குடைவரைக் கோயிலில் அமைந்துள்ள கற்பக விநாயகரை 'தேசிய விநாயகப் பிள்ளையார்' என கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

ஃ கி. பி. 12 ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் அல்லது 13ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் பிள்ளையார்பட்டிக் கோயில் நகரத்தாருக்கு உரிமையாயிற்று என்று கூறப்படுகிறது.

ஃ இக் குடைவரைக் கோயிலுள் பதினெரு கல்வெட்டுக்கள் உள்ளன.

ஃ பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலைப் பரிபாலனம் செய்வதற்கு 1. காரைக்குடி மெ. மெ. குடும்பத்தார் ஷி யூர் ஆத. முரு. குடும்பத்தார் 2. வலையபட்டி மு. நா. அ. குடும்பத்தார் ஷி யூர் ந. ராம. அ. குடும்பத்தார் 3. கண்டனூர் மு. நா. குடும்பத்தார் 4 ஆ. முத்துப்பட்டணம் சித மு. குடும்பத்தார் 5. காரைக்குடி வீர. குடும்பத்தார் 6. கண்டவராயன்பட்டி பழ. கரு. குடும்பத்தார் 7. காரைக்குடி அடை. ஆத. குடும்பத்தார் ஷியூர் கு. மெ. குடும்பத்தார் 8. பூலாங்குறிச்சி ராம. ப வ. குடும்பத்தார் 9. நற்சாந்துபட்டி கும. பெரி. குடும்பத்தார் 10. காரைக்குடி ஆவி. ப. குடும்பத்தார் 11. கோனபட்டு கு. அ. ப. அரு. குடும்பத்தார் 12 அரிமளம் பெ. ராம. குடும்பத்தார்



பிள்ளையார்பட்டிக் கோயிலின் அழகுமிகு தோற்றம்

13. அமராவதிபுதூர் ராம. வயி. குடும்பத்தார் 14. தேவகோட்டை நாக. குடும்பத்தார் 15. காரைக்குடி முரு. குடும்பத்தார் 16. குருவிக்கொண்டான்பட்டி கரு. பழ. குடும்பத்தார் ஆகிய பதினறு குடும்பங்களிலிருந்து வரிசைக்கிரமமாக ஆண்டுக்கு இரண்டு குடும்பத்தார் – தங்களுக்குள் குடும்பத்திற்கு ஒருவர் வீதம் தக்க இருவரைத் தேர்ந்தெடுத்து காரியக்காரர்களாக (Trustees) நியமித்து சமுதாய விஷயங்களையும் கோயில் நடைமுறை முதலியவற்றையும் நிர்வகித்து வருகிருர்கள். இது போல எட்டாண்டுகளுக்கு ஒரு முறை, இதே அட்டவணைப்படி திரும்பத் திரும்ப இதே வரிசையில் நடப்புக் காரியக்காரர்கள் பொறுப்பேற்று நிர்வகித்து வருகிருர்கள். 1924 முதல் இதுபோல் நடந்து வருகிறது.

ஃ ஆண்டு தோறும் ஆவணித் திங்களில் வரும் விநாயகர் சதுர்த்தியே பிள்ளையார்பட்டியின் பெரிய திருநாள் ஆகும். காப்புக் கட்டி, கொடியேற்றம் செய்து இத் திருநாள் பத்து நாட்கள் நடைபெறும். இந்தப் பத்து நாட்களிலும் இரவு நேரத்தில் கற்பக விநாயகர் பல்வேறு வாகனங்களில் அமர்ந்து திருவீதி பவனி வருவார்.

ஃ இங்கு கோயில் கொண்டுள்ள கற்பக விநாயகப் பெருமானின் துதிக்கை, வலம் சுழித்ததாக அமைந்திருப்பது – மற்ற இடங்களில் இருப்பதைப் போல நான்கு கைகள் இல்லாமல் இரண்டு கைகளைக் கொண்டிருப்பது – அங்குச பாசங்கள் இல்லாமல் விளங்குவது – வயிறு ஆசனத்தில் படியாமல் 'அர்த்த பத்ம' ஆசனம் போன்று இலங்குவது – ஆண் பெண் இணைப்பைப் புலப்படுத்தும் முறையில் வலது தந்தம் நீண்டும் இடது தந்தம் குறுகியும் இருப்பது போன்றவை இதன் சிறப்பம்சங்கள்.

ஃ கற்பக விநாயகர் கோயிலில் 22–1–1899, 10–2–1928 10-2–1951, 10–9–1976 ஆகிய தினங்களில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 12—6—1933ல் மருதங்குடி நாயனர் திருச் சந்நிதி ராஜகோபுரம் கட்டி முடித்து கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.



அனைவருக்கும்
அருள் பாலிக்கும்
ஸ்ரீ கற்பக விநாயகர்

ஃ ஸ்ரீகற்பக விநாயகர் பதிகம் கற்பக விநாயகர் பதிற்றுப் பத்தந்தாதி, வாடாமலர் மங்கை பதிகம் மருதீசர் பதிகம், ஸ்ரீ கற்பக விநாயகர் பதிகம். தேசி விநாயகப் பிள்ளையார் ஒருபா ஒருபது ஆகிய நூல்களில் இத் திருக்கோயில் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

ஃ கஜமுகா சூரனைக் கொன்ற பழி விலக, சிவபிரானை விநாயகப் பெருமான் பூஜித்த தான ஐதீகத்தை இத்தலம் புலப்படுத்துகிறது.

ஃ கம்பன் அடிப்பொடி சா. கணேசன், ஏவி. மெய்யப்ப செட்டியார் (ஏவி. எம்) அமராவதிபுதூர்

வயிநாகரம் வெ. ராம. சோம. கருப்பஞ் செட்டியார் போன்றவர்கள் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்தவர்கள்.

ஃ 30–6–1985ல் முடிவான பசலிப்படி, பிள்ளையார்பட்டிக் கோயிலில் 2855 நகரத்தார் புள்ளிகள் இருக்கின்றனர்.

ஃ பிள்ளையார்பட்டிக்குச் சென்று தங்கும் நகரத்தார் பெண்களுக்கு 1980க்கு முன்பு காய்கரி, மோர், இலை மட்டும் இலவசமாகக் கொடுத்து வந்தார்கள். 1980 லிருந்து 3 நாட்களுக்கு இலவசமாகச் சாப்பாடு போடப்படுகிறது. நகரத்தார் ஆண்களுக்கு மூன்று நாட்களுக்கு மேலேயும் இலவசமாகச் சாப்பாடு போடப்படுகிறது.

ஃ ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில் காலை 6 முதல் 6-30 மணி வரை திருவனந்தலும் 8-30 முதல் 9-30 மணி வரை காலைச் சந்தியும் பகல் 11 முதல் 12 மணி வரை உச்சிக்காலமும் மாலை 5 முதல் 6-30 மணி வரை மாலைச் சந்தியும் இரவு 7-30 முதல் 8-30 மணி வரை இரவுச் சந்தியும் நடைபெறுகின்றன.

ஃ கோயிலைச் சேர்ந்த நகர விடுதியில் சித்திரை முதல் பங்குனி முடிய உள்ள தமிழ் ஆண்டுக்கு சங்கடகற சதுர்த்தி, சுக்கில சதுர்த்தி பற்றிய விவரங்கள் எழுதப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஃ பிள்ளையார்பட்டியில் ஆண்களுக்கென தனியாக விடுதியும் பெண்களுக்கென தனியாக விடுதியும் உள்ளன.

தொகுப்பு: "எல்லெஸ்"

# மதுரையில் மாபெரும் எவர்சில்வர் பாத்திரக் கடை!



வாட்டமான

## "செட்டிநாடு எவர்சில்வர் அலுமினியப் பாத்திரங்கள்"

வாங்குவதற்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

மதுரையில் **எவர்சில்வர்** அலுமினியப் பாத்திரங்களுக்கு

# அலங்கா

## மெட்டல் கம்பெனி

போன்: 31991.

43, காமராஜர் சாலை, மதுரை-1.

# ரவி தமிழ்வாணன்

பிரபல எழுத்தாளர், அமரர் திரு. தமிழ்வாணனுக்கு இரு புதல்வர்கள். மூத்தவர் திரு. லேனா தமிழ்வாணன்; திரு. ரவி தமிழ்வாணன், இளையவர். இவர் சென்னை லயோலாக் கல்லூரியில் பி. காம். பயின்றவர். 'தந்தையோடு கல்வி போ(கு)ம்' என்ற பழமொழியின்படி தந்தை மறைவால் ஆடிட்டர் படிப்பை இடையில் கைவிட்டு விட்டு பிறகு மணிமேகலைப் பிரசுர நிர்வாகப் பங்குதாரர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

திரு. தமிழ்வாணனின் மறைவின் போது 170 வகையான நூல்களே மணிமேகலைப் பிரசுரத்தில் விற்பனைக்கென்று இருந்தன. திரு. ரவி தமிழ்வாணனின் முயற்சியால் மிகக் குறுகிய காலத்தில் அது 500 ஆக ஆகியிருக்கிறது. தமிழக அரசு நூலக இயக்ககம் வழங்கும் ஆர்டரில், பெயருக்கு ஏதோ ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்த மணிமேகலைப் பிரசுரம் கடந்த நான்கு ஆண்டுகளாக முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

புகுமுக வகுப்புப் படித்த காலத்திலேயே தந்தையின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, வீட்டு நிர்வாகம், வரவு செலவுகள், ஆங்கிலக் கடிதப் போக்குவரத்து ஆகியவற்றில் தந்தைக்குப் பெரிதும் உதவியாக இருந்தவர் இவர். காரைக்குடி அழ. வீரப்பச் செட்டியார் அவர்களின் (ஸ்ரீ காட்டன் மில்ஸ் மதுரை) புதல்வி திருமதி வள்ளியின் மணாளரான இவர் ஒரு குழந்தைக்குத் தந்தை. 30 வயதாகும் இந்த ஆறடி இளைஞர். உயரத்தால் மட்டுமல்லாமல், நிர்வாகத்திலும் மிகச் சிறந்த ஒருவராகக் கருதப்படுகிறார்.

''உங்கள் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் என்ன காரணம்?'' என்று கேட்டால் ''என் இயல்பான அனுபவ அறிவு போக, பரம்பரைத் தன்மை ஒரு காரணம். என் அண்ணனின் ஒத்துழைப்பையும் குறிப்பிட வேண்டும். நானும் என் சகோதரரும் நண்பர்கள் மாதிரி. தவறாது ஒவ்வொரு புதன் கிழமை மாலையும் கடற்கரை செல்வோம். குடும்பம், தொழில் பற்றி



இருவரும் விவாதிப்போம். இன்னும் சிறப்பாகச் செய்வது எப்படி என்பது பற்றிச் சிந்திப்போம். இது போக, மாதம் ஒருமுறை மாமல்லபுரம் சென்று ஒருநாள் தங்கி விஷயங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் அலசுவோம். எதிர்காலம் பற்றித் திட்டமிட, நிகழ்காலத்தில் சிறப்புடன் செயலாற்ற இப்பழக்கங்கள் மிகவும் உதவியாயிருக்கின்றன'' என்று, சிரித்தபடி கூறுகிறார் திரு ரவி தமிழ்வாணன்.

---

## பொன்மொழி

கடமைகளைச் செய்யாமல் உரிமைகளைத் தேடினால் அவை, கானல் நீராகிவிடும்.

— காந்தியடிகள்

அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள் !

தந்தி : ''ஜுப்லீஸ்'' தொலைபேசி எண்: 33631

# ஜுபிடர் லீசிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட்


பதிவு அலுவலகம் : 150, தெற்கு மாசி வீதி,
மதுரை-625 001.

மொபெட், ஸ்கூட்டர், ஆட்டோ, கார், பஸ் லாரி, வர்த்தக வாகனங்கள் மற்றும் இயந்திரங்களுக்கும் தவணை முறையில் கடன் கொடுக்கப்படும்.

திரு. SP. அழகப்பன் – சேர்மன் & மேனேஜிங் டைரக்டர்
திரு. P.G. வாஞ்சீஸ்வரன் – எக்ஸிக்யூட்டிவ் டைரக்டர்
திரு. S. முத்துராஜா – டைரக்டர்
திரு. OL. SP. உலகப்பன் – டைரக்டர்
திருமதி மீனாள் அழகப்பன் – டைரக்டர்
திருமதி. கண்ணாத்தாள் உலகப்பன் – டைரக்டர்
திரு. Ch. ஜெய்சந்த் – டைரக்டர்

பிக்சட் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும்

விபரங்களுக்கு எங்கள் பதிவு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.



# உங்கள் குரல்

அன்று பாடுவார் பாட, மழை பெய்தது. இன்று பட்டினத்தடிகள் திருவிழாவில் பேராசிரியர் அர. சிங்காரவடிவேலன் அவர்கள் வாழ்த்த, ப. சிதம்பரம் அவர்கள் அமைச்சராகியுள்ளார்கள்.

சி. ஜம்புலிங்கம்
தேவகோட்டை

'வானதி' திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய கவியரசு கண்ணதாசன் கட்டுரை என்னை மிகவும் ஈர்த்தது. இக்கட்டுரை மூலம் கவியரசரை நேரில் காண்பது போன்ற உணர்வை ஏற்படுத்திய பெருமை திருநாவுக்கரசு அவர்களுக்கே உரியது.

என். நாராயணன்
கண்டனூர்

அக்டோபர் '85 அட்டைப் படம் வெகு அழகு. வானதி திருநாவுக்கரசு அவர்களின் கவியரசர் பற்றிய கட்டுரை மிக அருமை. கவியரசரின் பண்புகள், இயல்புகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

வெற்றியூர் வெங்கட்
நாட்டரசன்கோட்டை

வெளியூரில் உள்ள நான், பிள்ளையார்பட்டி விநாயகப் பெருமானை தங்கள் இதழின் மூலம் சந்தன அலங்காரத்தில் கண்டு அருள் பெற்றேன். புகைப் படங்களை அற்புதமாக வெளியிட்டு அமர்க்களப்படுத்திவிட்டீர்கள். தாலாட்டுப் பாடல்கள் எல்லாமே பாசப் பிணைப்போடு அமைந்துள்ளன. தீபாவளிச் சிறப்பிதழ் அதிகப் பக்கங்களுடன் வெளி வருவது அறிந்து மகிழ்ச்சி.

அரு. சோம சண்முகநாதன்
உலகம்பட்டி

திருச்சி நகரத்தார் சங்கம் மேற்கொண்டுள்ள கூட்டுத் திருமணம் வரவேற்கத்தக்கது. 'செய்திகள் வாசிப்பது' பகுதியில் நல்ல செய்திகள் அடங்கியுள்ளன. சரஸ்வதி அட்டைப் படம் தூள். தீபாவளிச் சிறப்பிதழை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

கே. இராதாகிருஷ்ணன்
ஆத்தங்குடி

வெல்லக் கட்டியில் எல்லாப் பக்கமுமே இனிக்கும். அது போலவே அக்டோபர் இதழில் எல்லாப் பக்கங்களும் இனிக்கின்றன. பல புதிய பகுதிகளுடன் வெளிவர விருக்கும் தீபாவளிச் சிறப்பிதழை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.

ராம. வ. இராமசாமி, சேலம்

கவியரசர் பற்றிய வானதி திருநாவுக்கரசு அவர்களின் கட்டுரை கவியரசரின் பல பெருமைக்குரிய செய்திகளைத் தெரிவித்தது.

வை. அழகப்பன், லாலாப்பேட்டை

அட்டையில் அழகுடன் அமைந்திருந்த சரஸ்வதியின் காட்சியும் உள்ளே சந்தன அலங்காரத்துடன் கூடிய கற்பக விநாயகரின் காட்சியும் என் இரு கண்களுக்கும் கண்கொள்ளாக் காட்சிகளாகக் காட்சியளித்தன.

ஆர்எம். நல்லப்பன், தஞ்சாவூர்

'கட்டுத் தறியும் கவிபாடும்' அருமையான இலக்கியக் கட்டுரை. எல். சுந்தரம் அவர்களே செய்திகளை வாசிக்க இன்னும் நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அவை பயனுள்ளவை!

சுப. கண்ணப்பன், கோயமுத்தூர்

# தியேட்டர் அதிபருடன் ஒரு பேட்டி

''மற்ற தொழில்களின் உரிமையாளர்களைக் காட்டிலும் தியேட்டர் உரிமையாளர்களுக்கு 'பாப்புலாரிட்டி' அதிகம் இருக்கிறது. மற்ற தொழில்களையும் தியேட்டர் தொழிலையும் 'கம்பேர்' செய்து பார்த்தோமானால் தியேட்டர் தொழிலில் இலாபம் குறைவு. ஆனால் இதில் பாப்புலாரிட்டி, பப்ளிக் ரிலேஷன், கவர்ண்மென்ட் ஆபீஷியல் தொடர்பு இருக்கிறது'' என்று கூறுகிறார், காரைக்குடி சிவம் தியேட்டரின் பங்குதாரர்களில் ஒருவரான திரு. ஏ ஆர். தெட்சிணாமூர்த்தி.


''அப்படியானால் உங்களுக்கு 'பாப்புலாரிட்டி' வேண்டுமென்பதற்காகத்தான் தியேட்டரைக் கட்டினீர்களா?

''அப்படி இல்லை...... 'நம் பகுதியான காரைக்குடியில் வசதியான நல்ல தியேட்டர் இல்லையே! நாம் ஏன் இங்கு ஒரு நவீன தியேட்டரைக் கட்டக்கூடாது?' என்ற எண்ணம் ஏற்பட்டது. அந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே இங்கு நாங்கள் எங்கள் சிவம் தியேட்டரை உருவாக்கி இருக்கிறோம்.''


''உங்கள் தியேட்டர் பற்றிக் கொஞ்சம் சொல்லலாமா?

''எங்கள் தியேட்டரை — படம் பார்க்கும் இரசிகர்களின் சௌகரியங்களை மனதில் கொண்டு நவீன வசதிகளுடன் நிர்மாணித்திருக்கிறோம். தமிழ்நாட்டில் சுமார் 2600 தியேட்டர்கள் உள்ளன. அவற்றில் நம்மினத்தவர்களுக்குச் சொந்தமானவை சுமாராக 200 இருக்கும். அந்த வகையில் நாங்களும் பெருமை கொள்கிறோம்''

''எங்கள் தியேட்டரில் மூன்று வகுப்புகள் உள்ளன. சீட்டுகளின் எண்ணிக்கை 666. எங்களது



காரைக்குடி சிவம் தியேட்டர் திறப்பு விழாவில் தமிழக அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்எம். வீரப்பன் அவர்களுடன் திரு. அரு. ஆறுமுகம், திரு. அரு. தெட்சிணாமூர்த்தி, திரு. அரு. நாகப்பன்— அமர்ந்திருப்போர் - திரு. அரு. பழநியப்பன், திரு. வி. என். சிடி, (தக்கார்) திரு. துரைராஜ் M. L. A.



காரைக்குடி சிவம் தியேட்டர் திறப்பு விழாவில் (3—9—85) திருவாளர்கள் அரு. ஆறுமுகம், அரு. பழநியப்பன், அரு. தெட்சிணுமூர்த்தி, அரு நாகப்பன், வி. என். சிதம்பரம் செட்டியார் (தக்கார்) தமிழக அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்எம். வீரப்பன் அவர்கள்.

தியேட்டருக்கு 'காம்பவுண்டிங்' முறையில் அரசு கேளிக்கை வரி வசூலிக்கிறது. நாங்கள் எங்கள் சிவம் தியேட்டருக்கு கேளிக்கை வரியாக வாரத்திற்குச் சுமாராக ரூ. 10,000/- செலுத்துகிறோம். அந்த வகையில் ஆண்டுக்குச் சுமாராக ரூ. 5 இலட்சம் அரசுக்கு வருமானம் கிடைக்கிறது.''

திரு. ஏஆர். தெட்சிணுமூர்த்தி 34 வயது இளைஞர். இவரது சொந்த ஊர் ஆத்தங்குடி. வயிரவன் கோயில் தெய்யனூர் வகுப்பைச் சேர்ந்தவர். வீர. சு. ராம, அருணுசலம் செட்டியார் அவர்கள், இவரது தந்தையாரா வார்கள். திரு. தெட்சிணுமூர்த்திக்கு ஐந்து சகோதரர்கள். திரு. ஏஆர். இராமசாமி, திரு. ஏஆர். பழனியப்பன், திரு. ஏஆர். ஜம்புலிங்கம் ஆகிய மூவரும் மூத்தவர்கள் திரு ஏஆர். நாகப்பன், திரு. ஏஆர். ஆறுமுகம் ஆகிய இருவரும் இளைய வர்கள். இவர்கள் அனைவரும் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாக இருந்து எல்லாக் காரியங்களையும் ஒருவருடன் ஒருவர் கலந்து பேசி சிறப்புடன் செய்து வருகிறார்கள். இவர்கள் தியேட்டர் தொழில் தவிர மலேயாவில் எஸ்டேட்டுகள் சென்னை, ஈரோட்டில் நூல் வணிகம். மற்றும் சில தொழில்களைச் செய்து வருகிறார்கள்.

திரு. தெட்சிணுமூர்த்தியை அண்மையில் மதுரையில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது தியேட்டர் சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் சொக்கலிங்கம் புதூரைச் சேர்ந்த சோலார் ஏஆர். லெட்சுமணன் செட்டியார் அவர்களைக் கலந்து கொண்டு தாங்கள் செய்வதாகவும் அவர்கள் தங்களுக்கு நல்ல ஆலோசகராக இருந்து காரியங்களைச் செய்து தருவதாகவும் தெரிவித்தார்கள்.

ஸ்டார் ஹோட்டல் ஒன்றைக் கட்டும் திட்டம் தங்களுக்கு இருப்பதாகவும் அதுவும் விரைவில் தொடங்கப்படும் எனவும் திரு, தெட்சிணுமூர்த்தி தெரிவித்தார்கள்.

பேட்டி: எல். சுந்தரம்

# கோவிலூர் மடாலயம் : புதிய தலைவர்!

கோவிலூர் மடாலய ஆண்டவர் மன்றத்தின் புதிய தலைவராக ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் என்ற சாத்தப்ப தேசிகசுவாமிகள் 24—10—85 அன்று கோவிலூரில் பதவி ஏற்றார்கள். இது 11 ஆவது பட்டமாகும்.

பதவி ஏற்கும் முன்பாக அவர்கள் சாதுக்களுடன் முதல் மூன்று மடாதிபதிகளின் சமாதிகளுக்கும் தமது குரு அரு. இராமநாத ஞானதேசிக சுவாமிகளது சமாதிக்கும் சென்று வழிபட்டார்கள்.

பதவி ஏற்பு நிகழ்ச்சி 24—10—85 அன்று காலை 10-55 மணி அளவில் பிரம்மசபையில் சாதுக்கள், நகரத்தார்கள் மற்றும் பொதுமக்களின் முன்னிலையில் நிகழ்ந்தது. சுவாமிகள் பதவி ஏற்றவுடன் அனைவருக்கும் திருநீறு வழங்கியதோடு "நகரத்தார் அனைவரும் எப்போதும் போல் பெருமளவில் வந்துபோய் இருக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்கள்,

## வாழ்க்கைக் குறிப்பு

ஸ்ரீலஸ்ரீ சிவான தேசிக சுவாமிகள் தேவகோட்டையைச் சொந்த ஊராகக் கொண்டவர்கள். இளையாத்தக்குடி ஒக்கூர்ப் பிரிவைச் சேர்ந்தவர்கள். 61 வயதுடையவர்கள். இலங்கையில் சீனியர் கேம்பிரிட்ஜ் படித்துப் பட்டம் பெற்றவர்கள். திருப்பரங்குன்றம் மேலவீதியில் உள்ள கற்பக விநாயகர் கோவிலை பொதுமக்களின் நன்கொடை மூலம் உருவாக்கி அதில் இருந்து கொண்டு வழிபாடு நடத்தி வந்தார்கள். தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம், கன்னடம், சௌராஷ்ட்ரா ஆகிய பலமொழி பேசக் கூடியவர்கள்.

அவர்கள் பதவியேற்றதும் நமது "நகரத்தார் குரல்" இதழுக்கு ஆர்வமுடனும் மகிழ்ச்சியுடனும் பேட்டி அளித்தார்கள். அப்போது அவர்கள் கூறியதாவது :—

1982ல் திருவண்ணாமலை கார்த்திகை தீபத்தன்று ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகளையும் ஸ்ரீலஸ்ரீ இராமநாத சுவாமிகளையும் நான் சந்தித்தேன். அப்போது அவர்கள் என்னைக் கோவிலூருக்கு வரும்படியாகச் சொன்னார்கள். அதன்படி நானும் கோவிலூருக்கு வந்து



ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

மடாலயத்தில் ஒக்கூராணம் பார்த்தேன், பின் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு நான் தனியாக வழிநடைப் பயணம் மேற்கொண்டேன். காசியிலுள்ள குமாரசாமி மடத்தில் மூன்று மாதங்கள் பூக்கட்டிக் கொடுத்து ஜீவித்தேன். பிறகு நேபாளத்திற்கு 400 மைல்கள் உள்ள சுற்றுப் பாதையில் வழிநடைப் பயணம் சென்றேன். நான் வடநாட்டில் உள்ள பல திருத்தலங்களுக்கும் கர்நாடகத்தில் உள்ள பல திருத்தலங்களுக்கும் சந்நியாசியாகச் சென்றேன்.



சுவாமிகள் பதவி ஏற்றவுடன் எடுத்த படம் இது. படத்தில் (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் ஏ. முத்தையா, ஏஎல். ஏஆர். எஸ்எம். நாராயணன் செட்டியார், மு. மெ. முத்துராமன் செட்டியார் (செயலாளர், கோவிலூர் மடாலயம்) ராம. லெ. ராம. லெ. லெட்சுமணன் செட்டியார், ஆர்எம். மெய்யப்பன், எல். சுந்தரம் (உதவி ஆசிரியர், ''நகரத்தார் குரல்'')

நேபாளத்தில் இந்து தர்மம் நிலைத்து நிற்கிறது. குஜராத் மாநிலத்தில் சாதுக்களை மேலாக நடத்துகிறார்கள்.

''சுவாமிகளே! தாங்கள் வேதாந்திர சாஸ்திரம் படித்திருக்கிறீர்களா?''

''இங்கு பதினாறு வேதாந்திர சாஸ்திர நூல்கள் இருக்கின்றன. நாணுஜீவாதக் கட்டளை, கீதாசாரத் தாலாட்டு, கைவல்யம் ஆகிய மூன்று நூல்களை நான் இதுவரை படித்திருக்கிறேன். மற்றவைகளை இனிமேல் படிப்பேன்.''

''நகரத்தார் பெருமக்களுக்குத் தாங்கள் கூற விரும்பும் சிறப்புச் செய்தி என்ன?''

''நகரத்தார் பெருமக்களின் ஒத்துழைப்போடு இம் மடாலயத்தை நன்கு நிர்வகிப்பேன். இங்கு கோயில் கொண்டிருக்கும் திருநெல்லைநாயகியின் அருளாலும் ஆதி ஆண்டவர் என்று கூறப்படுகின்ற முத்துராமலிங்க ஞான தேசிக சுவாமிகளின் (Founder of the Institution) அனுக்கிரகத்தாலும் இம்மடாலயமும நகரத்தாரும் மேன்மையடையப் பிரார்த்திக்கிறேன்.''

— இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

பேட்டி: எல். சுந்தரம்

## காடப்ப செட்டியாருக்குச் சிறப்புப் பட்டம்


குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன திருமடத்தில் ஆதீன குரு முதல்வர் திருவருள்திரு தெய்வசிகாமணி தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் குருபூஜைப் பெருவிழா 31—8—1985 அன்று ஆதீன கொலு மண்டபத்தில் நடைபெற்றது, அப்போது தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆத்தன்குடி கா. அரு. கா, காடப்ப செட்டியார் அவர்களுக்கு ''அருள்நெறிச் செல்வர்'' என்ற சிறப்புப் பட்டத்தினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

# முத்தையா சுப்பையா செட்டியார்

சுவீகாரம் சென்றவர்கள் பெரும்பாலும், தாம் பிறந்த ஊரை நினைப்பது அரிது. ஆனால், நம் முத்தையா சுப்பையா செட்டியார் அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர். நாட்டரசன்கோட்டையில் பிறந்து கானாடுகாத்தானுக்கு சுவீகாரம் சென்றுவிட்டாலும், தாம் பிறந்த ஊரை இவர்கள் மறக்கவில்லை! இவர்களை நாட்டரசன்கோட்டை வாசிகளும் மறப்பதாக இல்லை. காரணம் இவர்களது கல்வித்தொண்டு 1967ல் நாட்டரசன் கோட்டையில் இவர்கள் நிறுவியிருக்கும் 'கானாடுகாத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி' எத்தனையோ மாணவிகளுக்குக் கல்விக் கண் வழங்கியிருக்கிறது; வழங்கியும் வருகிறது.

(இப்பள்ளி தொடங்கப்படுவதற்கும், தொடங்கப்பட்ட பிறகு அதன் வளர்ச்சியிலும் நாட்டரசன் கோட்டை வெ. கண. கண்ணப்ப செட்டியார் அவர்கள் ஆற்றிய தொண்டு அளப்பரியது.)

முத்தையா சுப்பையா செட்டியார் அவர்கள், இலண்டன் மெட்ரிகுலேசன் பயின்று ஏறத்தாழ 35 ஆண்டுகள் இலங்கையில் இருந்து கல்வியிலும் வாணிபத்திலும் சிறந்து விளங்கினார்கள். இவர்கள் 1941ல் தோன்றிய இலங்கை-இந்தியக் காங்கிரசின் முதல் தலைவராகச் சீரிய பணியாற்றியவர்கள். வியட்னாம், இலங்கை ஆகிய நாடு



பள்ளி ஆண்டு விழாவில் (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் வி. கேஎன். உலகப்பன். எம். சிஎன், மாணிக்கம், வி. கேஎன். கண்ணப்பன் (இப்பள்ளியின் தாளாளர்), வி. என் சிதம்பரம் செட்டியார் (தக்கார்), கானாடுகாத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் (நிறுவனர்), நாட்டரசன்கோட்டை சுப. ராம. மெ. நடராஜன் செட்டியார், கரு. வயி. கருப்பன் செட்டியார் என்ற சோமசுந்தரம் செட்டியார், இடதுபுறம் தலைமை ஆசிரியை திருமதி பிரமிளா விஜேந்திரன்.

களில் பல அறச் செயல்கள் புரிந்தவர்கள். இவர்களது பாட்டனுர் நாகப்பச் செட்டியார் அவர்கள் திருப்பராயத்துறையிலே ஆலயம் அமைத்தவர்கள்.

எளிமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்துவரும் இப்பெருந்தகையின் எண்பதாவது பிறந்த தினம் 17—3—'85 அன்று நாட்டரசன்கோட்டையில் சிறப்பாக நடைபெற்றது.

இவர்களது துணைவியார் திருமதி சிட்டாள் ஆச்சி அவர்கள் பள்ளத்தூர் ஓ. ஏ. பிஆர். எம். அருணுசலம் செட்டியார் அவர்களின் புதல்வி ஆவார்கள். இவர்களுக்கு இரு ஆண் மக்களும், மூன்று பெண் மக்களும் உள்ளனர். (ஆண் மக்கள் சு. முத்தையா அவர்களும், சு. நாகராசன் அவர்களும் பொறியாளர்கள்)

கருணைக் கடலாய், அன்பின் ஊற்ருய், ஆதரித்து அறிவுரை கூறுவதில் அன்னையாய்த் திகழும் முத்தையா சுப்பையா செட்டியார் அவர்கள், பல்லாண்டுகள் வாழ்ந்து மேலும் தொண்டாற்றப் பிரார்த்திக்கிறோம்.

# நகரத்தார் குரல்

## உறுப்பினர்களுக்கு . . .

"நகரத்தார் குரல்" இதழுக்கு உறுப்பினர் கட்டணத்தை அனுப்பும்போது பல உறுப்பினர்கள் தமது உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடாமல் அனுப்புகின்றனர். இதனுல் எமக்குப் பல சிரமங்கள் ஏற்படுகின்றன; நேரமும் வீணுகின்றது.

ஆகவே சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போதும் பணம் அனுப்பும்போதும் அவசியம் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட்டு எழுதும்படியாகக் கேட்டுக்கொள்கிரேும்.

ஒவ்வொரு ஆண்டும் பணம் செலுத்தும்போது உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இரசீதின் எண்ணே, அந்த ஆண்டின் உறுப்பினர் எண் ஆகும்.

91/1



புதுக்கோட்டை மாவட்டம், வி லெட்சுமிபுரம் திரு. வ. முப. இராமசாமிச் செட்டியார் - திருமதி வள்ளியம்மை என்ற மங்கையற்கரசி ஆச்சியின் எண்பதாவது ஆண்டு நிறைவு சதாபிஷேக விழா குரோதனஞு ஆவணிமீ 20உ (5—9—85) வி. லெட்சுமிபுரத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுற்றத்தாரும், நண்பர்களும், வணிகப் பெருமக்களும் திரளாக வந்திருந்து சதாபிஷேக விழாவினைச் சிறப்பித்தார்கள்.

---



வேந்தன்பட்டி பழ. அ. இராமனுதன் செட்டியார் அவர்கள் புதல்வி ராமாயி என்ற மல்லிகாதேவிக்கும் வேகுப்பட்டி பெ ராம. சிதம்பரம் செட்டியார் அவர்கள் புதல்வன் முத்துராமன் என்ற ரமேஷ் B. Com.,க்கும் குரோதன ஆண்டு ஆவணித் திங்கள் 31ஆம் நாள் (16—9—1985) அன்று வேந்தன்பட்டி மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது வாழ்க மணமக்கள்! வாழ்க வளமுடன்!



# சான்றோர் வழிபாடும் நகரத்தார் கடமையும்

— சோமலெ —

எந்தவொரு சமுதாயமும் சிறந்து வாழவும் மேன்மேலும் ஏற்றம் பெறவும் விரும்பினால் அந்தச் சமுதாயத்தில் வாழ்ந்த முன்னோர்களில் தலைசிறந்தவர்களையும் பெரியவர்களையும் நினைப்பது - போற்றுவது - வழிபடுவது ஒரு மரபாகும். சீன நாட்டிலும் கேரள மாநிலத்திலும் இந்த இயல்புகளை மிகுதியாகக் காணுகிறோம்.

இங்கிலாந்தில் 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெரும் புலவர் 'ஷேக்ஸ்பியர்' ஆவார். என்றும் நின்று நிலவும் நாடகங்களை இயற்றி ஆங்கில மொழிக்கு ஆழிசூழ் உலகமெங்கும் பெருமை சேர்த்தவர் இவர். இவர் பிறந்த சிற்றூர் ஸ்டிராட் போர்டு-ஆன் ஆவன் என்பது. இது இலண்டன் மாநகரிலிருந்து 80 மைல் தொலைவில் உள்ளது.

ஸ்டிராட் போர்டு-ஆன் - ஆவனைச் சுற்றியுள்ள வட்டாரத்திற்கு 'ஷேக்ஸ்பியர் நாடு' என்று பெயரிட்டுள்ளனர். இலண்டனிலிருந்து நாள்தோறும் இச்சிற்றூருக்கு நான்கு இரயில்களும் ஏராளமான சுற்றுலா ஊர்திகளும் செல்லுகின்றன.

ஷேக்ஸ்பியர் பிறந்த வீடு, அவர் பயின்ற பள்ளி, அவர் வழிபட்ட கிறித்தவ தேவாலயம், நாடகங்கள் இயற்றுவதற்கு அவருக்கு உற்சாகமூட்டிய காட்சிகள், கற்பனை வளம் வழங்கிய சுற்றுச் சூழல் ஆகியவற்றையும், அவர் மனைவி பிறந்த வீட்டையும் வரலாற்றுச் சின்னங்களாகப் பேணி வைத்திருக்கிறார்கள்.

ஷேக்ஸ்பியருடைய திருவுருவமாக, குறிப்பிட்ட ஒரு படமே வெளியிடப்பட வேண்டுமென்று வரையறுத்து அந்த அறக் குழுவினர் அந்தப் படத்தை மட்டுமே அச்சிட்டு வழங்குகிறார்கள்.

ஷேக்ஸ்பியரைப் பற்றிய சின்னஞ்சிறு நூல்களும் அப்பகுதியை விளக்கும் வெளியீடுகளும் சுற்றுலா வாசிகளுக்கு ஏற்ற அடையாளப் பொருட்களும் விற்கப்படுகின்றன.

பருத்தி, லினன் இரண்டும் இணைந்த ஒருதுணியை ஆலைகளில் உற்பத்தி செய்து அந்தத் துணியில் ஷேக்ஸ்பியர் வாழ்ந்த இல்லத்தின் படம் கவர்ச்சியான வண்ணங்களில் கவினுற அச்சிடப்பட்டு இவ்வூரில் விற்பனை செய்யப்படுகிறது. பால்மனம் மாறாக் குழந்தைகளுக்கு இந்தத் துண்டை அணிவித்தால் அவர்கள் பிற்காலத்தில் கல்வியில் சிறந்தவர்களாகத் திகழுவார்கள் என்ற நம்பிக்கை இங்கு நிலவுகிறது.

ஆண்டுதோறும் ஷேக்ஸ்பியர் பிறந்த நாள் கொண்டாடப்

படுகிறது. அந்த நாளில் இலண்டனில் தூதுவர்களாக இருப்பவர்கள் அனைவரும் அவரவர் நாட்டுக் கொடியுடன் அங்கு வந்து அந்த நாட்டு அரசாங்கத்தின் சார்பாகவும், மக்களின் சார்பாகவும் ஷேக்ஸ்பியர் சமாதியில் மலர் வளையம் வைத்து வணங்குகின்றனர்.

வட இந்தியாவில் உள்ள அயோத்தி, இராமபிரான் பிறந்த பெருமையுடையது. இந்த புனித தலத்திற்கு வரும் ஒவ்வொருவரும் இராமர் கோவிலிலும் வால்மீகி, துளசிதாஸ் கோவில்களிலும் வழிபடுவதோடு, சமஸ்கிருதத்தில் அல்லது இந்தியில் வெளிவந்த இராமாயணத்தின் ஒருபடியையும் வாங்கிச் செல்கின்றனர்.

தமிழ்நாட்டில் பெருங் கவிஞர்களாக வாழ்ந்த திருவள்ளுவர், இளங்கோ, கம்பன், சுப்ரமணிய பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, ஆகியோர் புகழைப் பரப்பியதில் நகரத்தாரின் பங்கு மிகப் பெரியது.

பாரதியாருக்கு எட்டயபுரத்தில் மணிமண்டபம் கட்ட 1940ல் ‘கல்கி’ வார இதழ் ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி திட்டமிட்டார். அந்த மண்டபம் கட்ட ஏற்பட்ட செலவில் பாதிக்கு மேல் வழங்கியவர்கள் நகரத்தார்களே யாவர்கள்.

மண்டபம் ஏற்பட்டதால் 1943 முதல் ஆண்டுதோறும் பாரதியார் நாள் ஓர் இலக்கிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது பாரதியார் நூற்றாண்டு விழாவின்போது மகளிர் பாலிடெக்னிக் ஒன்றையும், நூற்பாலை ஒன்றையும் தமிழக அரசு எட்டயபுரத்தில் தொடங்கியது.

ஒரு மண்டபம் கட்டுவதென்பது சிறந்ததொரு எதிர்காலத்திற்கு பிள்ளையார் சுழி போடுவதுதான். பின்விளைவுகள் போகப் போகத்தான் தெரியும். அவை நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மை பயப்பனவாய் இருக்குமென்பதை மட்டும் உறுதியாக நம்பலாம்.

18, 19.ஆம் நூற்றாண்டுகளில் நம்மிடையே வாழ்ந்த பெருங் கவிஞர், வாக்குப் பலிதமிக்க அருட்கவிஞர் பாடுவார் முத்தப்ப செட்டியார் ஆவார்கள். அன்னாருடைய நினைவைப் போற்றுவதும் அவரை வாழ்த்துவதும் நகரத்தார்களுக்கு உரிய கடமையாகும். இறைவனை வாழ்த்துவதும், சான்றோரை வாழ்த்துவதும் நாம் வாழ்வதற்கே

பாடுவார் பிறந்த கீழச்சிவல் பட்டியில் அவருக்கு கோட்டம் (கோவில்) கட்ட அவ்வூர் அன்பர்களனைவரும் ஏனையோரும் 8-9-85 அன்று கூடி பாடுவார் முத்தப்பர் கோட்ட அமைப்புக் குழு ஒன்றையும் நியமித்திருக்கிறார்கள்.

இதுபற்றி எனக்குத் தோன்றிய ஒருசில சிந்தனைகளை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இவை எனது தனிப்பட்ட கருத்துக்களே யாகும் ஏனையோரும் தாராளமாக தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். அனைவரும் கூடி சிந்தித்து ஒப்புக்கொள்கிற திட்டங்களை மட்டுமே நிறைவேற்றுதல் பொருத்தமாக இருக்கும்.

பாடுவார் முத்தப்பர் கோட்டத்தில் அவருடைய திருஉருவம் கருங்கல்லிலோ, சலவைக் கல்லிலோ அழகாக சமைக்கப் பெற வேண்டும்.


பாடுவார் முத்தப்பர் வரலாறும் அவருடைய படைப்புக்களிலிருந்து பொறுக்கி எடுத்த சில பாடல்களும் சலவைக் கற்களில் பதிக்கப் பெற வேண்டும்.

‘செட்டிநாடு’ என்ற சொற்றொடரை எழுத்தில் முதன் முதலாகப் பயன்படுத்திய தமிழறிஞர் பாடுவார் என்று தெரிகிறது. செட்டிநாட்டு எல்லைபற்றி ‘வெள்ளாறது வடக்காம்’ என்ற பாடலும் பாடுவார் இயற்றியதே ஆகும்.

எனவே, இப்போது நகரத்தார் வாழும் ஊர்களையும், முன்

னர் வாழ்ந்த ஊர்களையும் சேர்த்து மொத்தம் 96 ஊர்களையும் குறிப்பிட்டுக் காட்டும் வரைபடத்தையும், செட்டி நாட்டு எல்லைபற்றிய பாடுவார் பாடலையும் சலவைக் கல்லில் பொறிக்க வேண்டும்.

ஸ்டிராட்போர்டு - ஆன்—ஆவனிலுள்ளது போல் பாடுவார் முத்தப்பர் மரபு வழி விபரமும் இக்



கீழச்சிவல்பட்டியில் உள்ள
பாடுவார் முத்தப்பரின் சிலை

கோட்டத்தில் இடம்பெறுவது பொருத்தமானதாக இருக்கும்.

பாடுவார் முத்தப்பர் கோட்டம் வழிபடும் இடமாக, பிரார்த்தனை மண்டபமாக, கோயிலாக மட்டுமே இருக்க வேண்டும்.

மிகச் சிறியதொரு மண்டபம் பிற்காலத் தேவைக்குப் போதியதாக இராது. காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தைப் போல் மிகப் பெரிதாகக் கட்டுவதும் தேவையில்லை.

கலை அழகுடனும், கட்டிடத் துறை நிபுணர்களின் திட்டப்படியும் இந்தக் கோட்டம் எழுப்பப்படவேண்டும்.

மேற்கூறியது திட்டத்தின் ஒரு பகுதி. இரண்டாம் பகுதியும் உண்டு.

இந்த இரண்டு பகுதிகளும் தனித் தனியாக இருக்க வேண்டும். ஒன்று கோவில்; மற்றொன்று நம் வசதிக்காக இன்றைய தேவைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளும் மண்டபம், நூலகம், ஓய்வறை முதலியன.

பாடுவாருக்குப் பின்னர் நகரத்தார் மரபில் வந்த தமிழ்ப் புலவர்கள், புரவலர்களின் படங்கள் இம்மண்டபத்தில் இடம்பெறலாம்

ஆண்டுதோறும் சூரன் திருவிழாவன்று பாடுவார் நினைவாக நடத்தப்படும் குருபூஜை தொடர்ந்தும் இன்னும் சிறப்பாகவும் செய்யப்பட வேண்டும்.

இப் பொறுப்பையும் குறிப்பிட்ட ஒரு நாளில் பாடுவார் நினைவாகச் சொற்பொழிவு - கவியரங்கம் -பாடுவார் நிகழ்ச்சிகள் அடங்கிய நாடகக் காட்சிகள் போன்ற நிகழ்ச்சிகள் கொண்ட விழாவை நடத்தவும் இவ்வூர் தமிழ் மன்றம் முன்வரும் என்று நம்புகிறேன்.

அகர வரிசைப்படி ஊர் ஊராக 96 ஊர் நகரத்தார்களும் வந்து பாடுவார் முத்தப்பர் திருவுருவத்திற்கு மாலையணிவித்து வணங்கும் சூழ்நிலை உருவானல் அது நம்மினத்தின் பொற்காலத்திற்கு விடிவெள்ளியாகயிருக்கும். ''என்றைக்கும் நீங்காதிரு'' என்று இலக்குமியை ஆணையிட்ட பெருங் கவிஞருக்கு நாம் செய்யும் கைமாருகவும் இருக்கும்.

தைத் திங்கள் 4ஆம் நாளில் 17—1—1986 வெள்ளிக்கிழமையன்று காலை 9 மணிக்கு 96 ஊர் நகரத்தார்களும் நகரத்தார் சங்கங்களின் பிரதிநிதிகளும் கீழச்சிவல்பட்டி ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப்பள்ளியில் கூடி பாடுவார் முத்தப்பர் கோட்டம் உருவாவதற்கு வேண்டிய திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டுகிறேம்.

## பாதரக்குடியில் நவராத்திரி விழா

நகரத்தார் ஆண்கள் குருபீட மாகிய பாதரக்குடி மடாலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பெரிய நாயகி சமேத ஸ்ரீ பழம்பதிநாத ருக்கு விசேட அலங்கார ஆராத னைகள் நவராத்திரிக் காலத்தில் செய்யப்பட்டன. பாதரக்குடி ஆதீ னகர்த்தர் தவத்திரு இரவீந்திர சுவாமிகளால் தினசரி சண்டி ஓம மும் நிகழ்த்தப்பெற்றது. நவராத் திரி விழா இலக்கிய நிகழ்ச்சிக்கு தவத்திரு இரவீந்திர சுவாமிகள் தலைமை வகித்தார்கள். குழந்தை கள் மங்கையர்க்கரசி மீனாட்சி, சுவாதிக் ஆகியோர் இறைவணக் கம் பாடினர். காரைக்குடி அழ கப்ப செட்டியார் வரவேற்றார். 'பொற்கிழிக் கவிஞர்' அரு. சோம சுந்தரன் ''மீனாட்சி திருமணம்'' பற்றிப் பேருரை நிகழ்த்தினார். குழந்தைகளின் பஜனை நிகழ்ச்சி யும் திருவிளக்குப் பூஜையும் நிகழ்ந்தன.

## மதுரை சர்வேஸ்வரர் ஆலயத்தில் நவராத்திரி விழா

மதுரை அண்ணா நகரில் உள்ள ஸ்ரீ சர்வேஸ்வரர் ஆலயத்தில் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. பேராசிரி யர் டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் இக்கோயிலின் அறங் காவலர் தலைவராக அரும்பணி ஆற்றுவது குறிப்பிடத்தக்கது. இங்கு 17–10–85 இரவு 'பொற் கிழிக் கவிஞர்' அரு. சோமசுந்த ரன் '' ஸ்ரீ கிருஷ்ணர் தூது '' பற்றிக் கதாகாலட்சேபம் நிகழ்த் தினர்.



இராங்கியம் அரு மு. அருணாசலம் செட்டியார் அவர்களது புதல்வன் செல்வன் சிவசுப்பிரமணியன் என்ற சிவாவுக்கும் குளிபிறை முரு. சித. முருகப்ப செட்டியார் அவர்களது புதல்வி செல்வி ஏகம்மைக் கும் 16—9—1985 அன்று குளிபிறையில் திருமணம் சிறப்புற நடை பெற்றது.

# 'தமிழ்க் கடல்' இராய. சொ.

## சொ. சொ. மீ. சுந்தரம் எம். காம்.,


கொள்ளும் தமிழ்க்கடல் கண்டதல்லால் — நூல்
கொடுக்கும் தமிழ்க்கடல் கண்டதில்லை
அள்ளும் தமிழ்க்கடல் கண்டதல்லால் — நூல்
அளிக்கும் தமிழ்க்கடல் கண்டதில்லை.

நீறு பொலிந்திடும் நெற்றியிலே — அறம்
நின்று விளங்கிடும் சொற்களிலே
ஆறு பொலிந்திடு செஞ்சடையான் — பதத்(து)
அன்பு பொலிந்திடும் நெஞ்சினிலே.

மாமது ரைப்பதிச் சொக்கலிங்கம் — அன்று
வந்ததோர் நஞ்சினை வாரியுண்டான்
தேமது ரத்தமிழ்ச் சொக்கலிங்கம் — இவன்
தேனில் அமுதத்தைக் கொட்டுகிறான்.

கங்கை அணிந்ததோர் சொக்கலிங்கம் — தன்னைக்
கண்டிடத் தேவர்கள் காத்திருப்பார்.
எங்கள் தமிழ்க்கடல் வீட்டினிலே — செல்வர்
எண்ணிக்கை இன்றியே காத்திருப்பார்.

கண்ணுதல் ஈசனைக் கும்பிடுவான் — உயர்
காந்தி மகான்வழி நம்பிடுவான்
அண்ணல் தமிழ்க்கடல் சொக்கலிங்கன் — புகழ்
ஆயிரம் ஆண்டுகள் வாழியவே.



சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் காரைக்குடி வெ. நாராயணன் அவர்கள் மகன் செல்வன் மீனாட்சி சுந்தரத்திற்கும் நியூயார்க் தமிழ்ச் சங்கத் தலைவர் கோனாபட்டு பி. எல் எஸ். மணி அவர்கள் மகள் செல்வி அன்னபூரணிக்கும் 2—9—1985 அன்று கோனாபட்டில் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. விழாவிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தர் டாகடர் எம். ஏ. எம் இராமசாமி அவர்கள் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.



# தொடரும் உறவுகள்...

மாணிக்கம் முத்தையா

தேவகோட்டை வீரபாண்டியபுரம்; வக்கீல் மேனா வீடு; கூட்டம் நிரம்பி வழிந்தது

வாசலில் 'பட்பட்'டென்று ஸ்கூட்டர்கள் நிற்கும் சப்தம். மேனாவின் சுறுசுறுப்பான ஜூனியர், காரைக்குடி சுப்பையா உள்ளே வந்தார். கூடவே ஒரு பெரும் புள்ளியும் வந்தார். அவருக்கு வயது நாற்பதிருக்கும்.

ஜூனியர் சுப்பையா அவரை மேனாவிற்கு அறிமுகப்படுத்துகிறார்-

"அண்ணே, இவரு எங்க பங்காளி; மலையாண்டிச் செட்டியார்னு பேரு; கல்யாணமாகி பதினஞ்சு வருஷமாகுது, ஆனா .. குடும்பத்திலே நிம்மதி இல்லை: இவரும் இவரது மனைவியும் எலியும் பூனையுமா இருக்காங்க...... எனவே மனைவி மீது விவாகரத்து வழக்குப் போடணுமாம்."

மேனா. அவரைக் கேட்டார் — "சார் நான் கேக்கிற கேள்விக்கெல்லாம் நீங்க கோபப்படாமே பதில் சொல்லணும்... அப்பத்தான் சட்டப்படி 'டைவர்ஸ் கேஸ்' போட முடியுமான்னு சொல்ல முடியும். ஓ . கே... ! ஆமா... "உங்க மனைவி தீராத குஷ்டரோகியா?"

மலையாண்டிச் செட்டியார்: இல்லை

மேனா: "ஆண் பெண் சம்பந்தப்பட்ட நோய் அவங்களுக்குண்டா?"

மலை: "இல்லை."

மேனா: "அவுக ஒங்களை விட்டு விட்டு வேறு ......களுடன் ...... ....................கொண்டு அந்த வருமானத்தில் வாழ்கிறார்களா?"

மலை: "என்ன, இப்படியெல்லாம் கேக்குறீங்க?"

மேனா: "அதுதான் முதல்லேயே சொல்லீட்டேனே—நான் கேக்குற கேள்விக்கெல்லாம் நீங்க கோபப்படாமே பதில் சொல்லோணும்னு"

மலை: "சும்மா சொல்லப்பிடாது, அந்த மாதிரித் தப்பெல்லாம் சொல்ல முடியாது."

## சிறுகதை

மேனா: "சரி, அவங்களுக்குப் பைத்தியமா?"

மலை: "இல்லை"

மேனா: "சரி, கடைசிச் சான்ஸ்; இரண்டு பேருக்கும் ஒத்துவரலே! அதுனாலே இரண்டுபேரும் மன ராசியா விவாகரத்துப் பண்ணிக்க சம்மதம்னு உங்க மனைவி எழுதித் தருவாகளா?"

மலை: "அது எப்படி சார் எழுதித் தருவா? எந்த மனைவியாவது அதுக்குச் சம்மதிப்பாளா?"

மேனா: "அப்படின்னா 'டைவர்ஸ் கேஸ்' போட முடியாது. சட்டப்

படி அதுக்கு, மேலே சொன்ன ஏதாவது ஒரு காரணம் வேணும். ஒங்க மனைவி குஷ்டரோகியாகவோ, பால் உறவு நோயாளியாகவோ, அல்லது ஒரு பைத்தியமாகவோ இருந்தாச் சொல்லுங்க. அடுத்த நிமிஷமே 'டைவர்ஸ் கேஸ்' போட்டுடறேன். இல்லாட்டி முடியாது.''

மலையாண்டிச் செட்டியார் ஏமாற்றத்துடன் வெளியேறினர்.

சில மாதங்கள் கழிந்தன.

காரைக்குடியில் ஒரு திருமணம். அங்கே வக்கீல் மேனுவும், மலையாண்டிச் செட்டியாரும் சந்தித்து பரஸ்பரம் விசாரித்துக் கொண்டனர்.

''வக்கீல் சார்; இப்ப என் மனைவி பைத்தியமா இருக்கா சார். பட்டணத்துக்கு அழைத்துச் சென்று நம்ம டாக்டர் சிடி. அழகப்பனிடமெல்லாம் காண்பித்தோம். அவளுடைய மனநிலை ஆழமாகப் பாதிக்கப்பட்டதால், பைத்தியம் குணமாக வெகு நாட்களாகுமாம்!''

மேனு: ''அப்படின்ன, ஒங்க மனைவி பைத்தியங்கிறதைக் காரணம் காட்டியே விவாகரத்து வழக்குப் போட்டுவிடலாமே?''

''போங்க சார், நீங்களும் ஒங்க சட்டமும்! காலமெல்லாம் அவளும் நானும் கீரியும் பாம்புமா வாழ்ந்த போது டைவர்ஸ் கேஸ் போடணும்னு நான் சொன்ன போது—டைவர்ஸ் கேஸ் போட முடியாதுன்னு சொல்லீட்டீங்க! ஆன அவ இப்ப தன்னை மறந்து சேலையையும், ரவிக்கையையும் கிழிச்சுக்கிட்டு அலங்கோலமா இருக்கும்போது, அதைக்காரணம் காட்டியே 'டைவர்ஸ் கேஸ்' போடலாம்னு சொல்றீங்க இது என்ன சார் நியாயம்? இப்பத்தான் ஒரு பொண்ணுக்கு அவ புருஷனுடைய அன்பும், ஆதரவும் முழுசாத் தேவைப்படுற நேரம். இந்த நேரத்திலே பச்சைக் குழந்தையா இருக்கிற அவளை விவாகரத்துப் பண்ணின, என்னைவிடப் பாவி வேறு யாருமே இருக்க முடியாது சார்!'' —என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியேறினர் மலையாண்டிச் செட்டியார்.

மேனுவின் கணிப்பில் மலையாண்டிச் செட்டியார் மிக உயர்ந்து நின்ருர்.

## பால்குடம், காவடி செலுத்தப் பெற்றது

மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் 6—9—85 அன்று திருப்பரங்குன்றம் ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமிக்குப் பால்க்குடம் காவடிகள் செலுத்தப் பெற்றன.

5—9—85 மாலை மதுரை நகர விடுதியில் காவடிகள் கட்டப் பெற்றன. ராம. முத்துப் பழநியப்பச் செட்டியார் அவர்கள் விநாயகப் பானை வைக்க, மதுரை நகரத்தார் சங்கத்தின் தலைவர் லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் வேலுக்கு அபிஷேகம் செய்தார்கள். காவடிக்கு அரகராச் செய்த பிறகு தேவகோட்டை வெ. நா. மு. இராமநாதன் செட்டியார் அவர்கள் வந்திருந்த பெருமக்களுக்கு சிற்றுண்டி வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மறுநாள் 6—9—85 காலை நகர விடுதியிலிருந்து 2 காவடிகளும் 11 பால்க் குடங்களும் புறப்பட்டன. அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில், அம்மன் சந்நிதி வாயிலில் ஆலயத் தக்கார் 'கலைக் காவலர்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் பால்க் குடக் காவடி, வேல் எடுத்துச் சென்ற பக்தர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். திரு. ராம. நா. கோவிந்தன் செட்டியார் வேல் எடுத்து வர, திருப்பரங்குன்றத்தில் அபிடேகங்கள் நிகழ்ந்தன. அன்று பகலில் திருப்பரங்குன்றம் நகரவிடுதியில் சுமார் 400 பேருக்குப் பகல் விருந்து அளிக்கப்பட்டு மகேச்சுர பூசை நடத்தப்பட்டது. மூன்றாண்டுகளாக நிகழும் இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை மதுரை நகரத்தார் சங்கமும், தேவகோட்டை லெ. மு. மு. முத்துமாணிக்கம் செட்டியார் அவர்களும் சிறப்பாகச் செய்திருந்தார்கள்.

# "காதல்" அரு. இராமநாதன்

**" காதல் " அரு. இராமநாதன் அவர்களின் நினைவு தினத்தை (18-10-1985) ஒட்டி இத் தொகுப்பு வெளியிடப் பெறுகிறது.)**

ஃ ''காதல்'' திரு. அரு. இராமநாதன் 7—7—1924 அன்று பிறந்தார்.

ஃ இவரது சொந்த ஊர் கண்டனூர். தந்தையார்– இராம. அருணசலம் செட்டியார்; தாயார் – அரு. வள்ளியம்மை ஆச்சி.

ஃ இவர் 'இராமையா', 'பூரம்' என்ற புனைப் பெயர்களில் எழுதி வந்தார்.

ஃ இவர் காதல், கலைமணி (திரைப்பட இதழ்) மர்மக் கதை ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்து அவற்றை நடத்தினர்.


ஃ 1947 டிசம்பரில் திருச்சியில் தொடங்கப் பெற்ற ''காதல்'' மாத இதழ், 1952ல் சென்னைக்கு மாற்றப் பெற்றது. அது மே'1981 வரை வெளி வந்தது.

ஃ திரு அரு. இராமநாதன் எண்ணற்ற நூல்களையும் இலக்கியங்களையும், கல்வெட்டுக்களையும் கற்றுத் தேர்ந்தவர்; பல துறை எழுத்தாளர்; 1967ல் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தாரால் 'சிறந்த நாடக ஆசிரியர்' என்ற விருதும் 'கலாசிகாமணி' என்ற பட்டமும் பெற்றவர்.

ஃ புத்தர், காந்தியடிகள், ஔவையார், இக்பால், சங்கரர், அதிவீரராமபாண்டியன், பாரதியார் ஆகியோரது கருத்துக்களையும் பைபிள், விவேக சித்தாமணி, பஞ்ச தந்திரம். திருக்குரான் போன்ற நூல்களில் உள்ள சிறந்த பகுதிகளையும் 'பொன்மொழிகள் வரிசை' என்ற பெயரில் கையடக்க நூல்களாக வெளிவரச் செய்தவர்.

ஃ 1952ல் இவர் தொடங்கிய பிரேமா பிரசுரம் எண்ணற்ற சிறந்த நூல்களை வெளியிட்டுள்ளது.

ஃ அறுபத்து மூவர் கதைகள், சித்தர் பாடல்கள், மரியாதை ராமன் கதைகள். மதனகாமராசன்



கதைகள், ஆழ்வார் பாடல்கள் ஆகியன இவர்தம் பதிப்புகளில் அழியா வரம் பெற்றவை.

ஃ இவர் எழுதிய சிறு கதைகளில் சில: கறுப்புத் திராட்சை, அம்பிகாபதி, சிவப்பு ரோஜா. பழையனூர் நீலி, கதாநாயகி, முதல் முத்தம்.

ஃ இவர் எழுதிய வரலாற்றுப் புதினங்களில் சில: வீரபாண்டியன் மனைவி, அசோகன் காதலி.

ஃ இவர் எழுதிய சமூக நாவல் – குண்டு மல்லிகை; குறுநாவல் – சவுந்தரவடிவு; அரசியல் நூல் – பிளேட்டோவின் சிந்தனைகள்.

ஃ அமுதவல்லி, கல்யாணிக்குக் கல்யாணம், பூலோக ரம்பை,

ஆரவல்லி சூரவல்லி, தங்கப் பதுமை, கற்புக்கரசி ஆகிய திரைப் படங்களுக்கு இவர் கதை, வசனம் எழுதியிருக்கிருர்.

ஃ வானவில், செஞ்சியில் சுதந்திர வீரன், ரோஜாவின் அத்தர், இராஜராஜ சோழன் போன்ற நாடகங்கள் இவர் எழுதியவை. (''இராஜராஜ சோழன்'' சிவாஜி கணேசன் நடிக்க, பின்னுல் சினிமாஸ்கோப் திரைப்படமாக வெளி வந்தது.)

ஃ எழுத்தாளர் பெயர் பெற்றவராயினும் சரி, பெயர் பெருதவராயினும் சரி அவர்கள் எழுதி வந்தவைகளைப் பிரித்துப் பார்க்காமல் இயன்ற பொருள் கொடுக்கும் பண்பாளராக விளங்கினுர்.

ஃ இவர் எழுதிய ''செஞ்சியில் சுதந்திர வீரன்'' எனும் தமிழ் நாடகம் வானெலியில் இந்திய மொழிகள் பதினுன்கிலும் மொழி பெயர்த்து ஒலிபரப்பப் பெற்றது.

ஃ இவர் எழுதிய ''ரோஜாவின் அத்தர்'' எனும் நாடகம், சில மாதங்களுக்கு முன் சென்னை டி. வி. நிலையத்தாரால் தொடராக மூன்று வாரங்கள் ஒளிபரப்பப் பெற்றது.

ஃ திரு. அரு. இராமநாதனுக்கு மனைவி திருமதி இராம. ரெங்கநாயகி ஆச்சியும் இராம. கண்ணப்பன், இராம. அருணுசலம், இராம. ரவி என்ற மூன்று புதல்வர்களும் உள்ளனர்.

ஃ திரு. அரு. இராமநாதன் 18—10—1974 அன்று இம் மண்ணுலகை நீத்தார்.

தொகுப்பு:

**கவிஞர் நா. மீனவன்**

# பாடகர் எஸ். வி. எஸ். அழகப்பன்

நம்மவர்களில் ஒரு சில பாடகர்கள் இருக்கிருர்கள். அவர்களில் திரு. எஸ் வி. எஸ். அழகப்பனும் ஒருவர். இவரது சொந்த ஊர் பி, அளகாபுரி. இவர் பிள்ளையார் பட்டிக் கோயிலைச் சேர்ந்தவர்.

64 வயதுடைய இவர், தனது 22ஆவது வயதிலேயே கர்நாடக சங்கீதம் கற்கத் தொடங்கி விட்டார். இவர் மானுமதுரை பிடில் வித்துவான் ராமச்சந்திர ராவிடம் மூன்று ஆண்டுகள் சங்கீதப் பயிற்சி பெற்ருர். பின்னர் சிதம்பரம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் இசைக் கல்லூரியில் சேர்ந்து சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையிடம் இரண்டு ஆண்டுகள் கர்நாடக சங்கீதம் பயின்ருர். இசைக் கல்லூரியில் சேருவதற்கு பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் தனக்கு உதவினுர்கள் என்றும் 'பத்ம பீடத்தில் முத்துக் குமாரன் சேவை' என்ற பாட்டை தன்னைச் சந்திக்கும்போதெல்லாம் பாடுமாறு கேட்டு. மகிழ்ந்து ஆசி கூறுவார்கள் என்றும் இவர் பெருமையோடு கூறுகிருர்.

இவரது சங்கீதக் கச்சேரி 1942-43ல் பி. அளகாபுரி பஜனை மடத்தில் அரங்கேறியது. 1951 வரை கச்சேரி செய்துவந்த இவர், அதன் பிறகு 1975வரை வட்டித் தொழில் செய்யச் செய்கோனுக்குச் சென்று விட்டார்.

இவரது கச்சேரிகளுக்கு குன்னக்குடி வைத்தியனுதன், லால்குடி ஜெயராமன் ஆகியோர் வயலின் வாசித்திருக்கிருர்கள். இவர் அகில இந்திய வானெலியிலும் பாடியிருக்கிருர்.

இவர் அண்மையில் குளிபிறையிலும் பிள்ளையார்பட்டியில் விநாயகர் சதுர்த்தி விழாவிலும் கச்சேரிகள் செய்திருக்கிருர். இவரது குரல் வளம், பாடல்களின் ஏற்ற இறக்கம் எல்லாமே அருமையாக உள்ளன.

இவர் தனக்குப் பிடித்த ராகங்கள் என்று ஆரவி, கல்யாணி,



பைரவி, முகாரி, சகாணு ஆகியவற்றைக் குறிப்பிடுகிருர்.

இவரது அன்பிலும் இசைத் திறமையிலும் கட்டுண்ட ஆவினிப் பட்டி அ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் இவருக்கு ஆதரவாக இருந்து வருகிருர்கள்.

— எல். சுந்தரம்

---

ராவன்னுமானு: ஏங்க? முதல் போடாத நல்ல இலாபகரமான தொழில் ஏதாவது இருந்தா ஒண்ணு சொல்லுங்களே?

மேனு: உடனே உங்க பையன்களுக்குக் கல்யாணம் செய்ய வேண்டியது தானே! அது தானே இப்ப இலாபகரமான தொழிலா இருக்கு!

— எஸ். எஸ்பி. மதுரை.

# சிந்தனை செய் மனமே!

டாக்டர் மெ. மெய்யப்பன் M. Sc., Ph. D.

1 ஜுலை 4ஆம் நாளன்று சுதந்திர தினம் கொண்டாடும் மூன்று நாடுகள் எவை?

2 அமெரிக்காவில் அடங்கியுள்ள மாநிலங்கள் எத்தனை?

3 இலைகளை உதிர்க்காத ஒரு மரம் எது?

4 Pin code-ல் உள்ள 'Pin' என்பது, எதிலிருந்து வந்தது?

5 வெட்டுக்கிளிக்கு காதுகள் எங்குள்ளன?

6 Zero hour என்றால் என்ன?

7 பித்தளை ஓர் உலோகம் இல்லை. உண்மையில் அது உலோகக் கலவைப் பொருளாகும். அதில் கலந்துள்ள உலோகங்கள் யாவை?

8 உலக அதிசயங்கள் ஏழு என்றாலும் அவற்றுள் சிறிதும் சீர் குலையாமல் இன்றைக்கும் அப்படியே காணப்படுவது எகிப்திலுள்ள பிரமிடுகள் தான். அது எவ்வளவு காலங்களுக்கு முற்பட்டது?

9 உருளைக்கிழங்குச் செடி பூத்துக் காய்க்குமா?

10 ஈரானின் பழைய பெயர் என்ன?

11 அரேபிய ஒட்டகங்களுக்கு ஒரு திமில் மட்டுமே உண்டு. இந்தியாவில் உள்ள ஒட்டகங்கள் இவ் வகையைச் சேர்ந்தது. இரு திமில்கள் உடைய ஒட்டகங்களும் உலகில் உண்டு. அதன் பெயர் என்ன?

12 உலகில் உள்ள பிராணிகளில் மிகவும் உயரமானது ஒட்டகச் சிவிங்கி. அதன் உயரம் எவ்வளவு தெரியுமா?

## விடைகள்:

1 அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ்

2 48

3 ஈச்ச மரம்

4 Postal Index Number என்ற வார்த்தைகளின் சுருக்கம்.

5 கால்களில்

6 எதிர்பார்த்த தாக்குதல் நேரம்

7 செம்பும், துத்தநாகமும்

8 பிரமிடுகள் சுமார் 4500 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தை ஆண்ட மன்னர்களுக்காகக் கட்டப்பட்ட கல்லறைகளாகும்.

9 உருளைக்கிழங்குச் செடி பூத்துக்காய்க்கும். இதற்கு விதைகளும் உண்டு. ஆனால் இவ் விதைகளிலிருந்து இனம் பெருகுவதில்லை. உருளைக் கிழங்கு என்பது அதன் வேரில் உள்ள தண்டுகளாகும்.

10 பாரசீகம்

11 பாக்டிரிய ஒட்டகம். இது மத்திய ஆசியாவின் வறண்ட பகுதிகளில் காணப்படுகின்றது.

12 சுமார் 7 மீட்டர்கள் (20 அடிகள்)

---

## சிரிப்பு

ஆடிட்டர்: என்னய்யா லாப நட்டக் கணக்கைப் பார்த்துட்டீரா?

குமாஸ்தா: (ஏதோ நினைப்பில்) பார்த்துட்டேன். பையனைப் பெற்றவருக்கு லாபம். பெண்ணைப் பெற்றவருக்கு நட்டம்.

— எஸ். எஸ்பி. மதுரை



# பாடுவார் முத்தப்பர் வாழ்வும் வளப்பும்

அருட்கவி
அழகாபுரி இளங்கோவன்

— 14 —

## அறிஞுரை ஆற்றுப்படுத்துதல்

முத்தப்பர், தன்னிடம் வந்து வறுமையால் வாடுவதாகச் சொல்லும் புலவருக்கெல்லாம் பரிந்துரைப் பாக்களைப் பாடிக் கொடுத்தார். அதற்கு ஆதாரமாக விளங்கும் நிகழ்ச்சியையும், பாடலையும் இப்போது காண்போம். பாடுவாருடன் பழகிய வேம்பத்தூர் மார்த்தாண்டப் புலவர் என்பவர் ஒருநாள் இவரிடம் வந்து உதவி வேண்டி நின்ருர். அப்போது முத்தப்பர், 'புலவர்கள் பொய்யையும் புழுகையும் நிறையப் பாடுவதால்தான் அவர்கள் பரிசு பெறுவதில்லை' என்ற கருத்துடன்,

படியாத மூடனையோ படித்தாய் என்பீர்!
பணமற்ற வறிஞனையோ பாக்கியன் என்பீர்!
குடிகாரப் போக்கிரியைக் குணவான் என்பீர்!
குன்ருரும் புயமென்பீர் கூனல் தோளை
வடிகட்டும் கஞ்சனையோ வள்ளல் என்பீர்!
வன்போரில் புலிஎன்பீர் வலியி லானை
விடியாத மூஞ்சியையோ வேந்தன் என்பீர்!
விணைவிடுமோ பொய்க்கவிதான் விளம்பு வோர்க்கே!

என்று அவருக்கு அறிவுரை கூறினர். பின்னர் ஆத்தங்குடி காடப்ப செட்டியார்க்கும், நேமம் நகரத்தாருக்கும் கீழ்க்கண்ட இரண்டு பரிந்துரைப் பாக்களை எழுதி அவர்களிடம் சென்று கொடுக்குமாறு கூறியனுப்பினர். அவர் கூறியபடியே புலவருக்கு ஆத்தங்குடியில் அவமதிப்பும், நேமத்தில் பெரும் பரிசும் கிடைத்தன. மார்த்தாண்டப் புலவரும் முத்தப்பரை மனமார வாழ்த்தியதுடன் அன்று முதல் வீணரைப் பாடுவதை விட்டொழித்து வாழ்ந்திருந்தார்!

## ஆத்தங்குடி காடப்ப செட்டியாருக்குப் பாடியது

அம்பல காரா என்றே ஆயிரம் தரம்சொன் ஞலும்
வம்பருக் களிக்கும் செப்பொன் வறியவர்க் கீயொ ணுதோ?
நம்பருக் களியாச் செல்வம் நஞ்சினுங் கொடிது கண்டாய்!
தம்பிகா டப்பா நீயித் தமிழ்ப்பய ணறிந்திடாயே!

## நேமம் நகரத்தார் பெருமக்களுக்காய்ப் புலவரிடம் பாடிக் கொடுத்தது

இத்தரை முழுதும் இசைபெறு நம்மீர்!
முத்தப் பன்யான் மொழிவது கேண்மின்
செந்தமிழ்ச் செல்வச் சீமா னிவர்தாம்
வளம்பெறு நிம்பை மார்த்தாண்டப் புலவர்
மடப்பளி அடுப்பு மறந்தது தொழிலதில்
ஆம்பி பூத்ததாம் ஆதலி ஞலிவர்
நம்பா லுற்றனர் நாவல ரிவர்க்கே
வேண்டும் பரிசில் விரும்புவ தளித்தும்
ஆண்டிவர் வறுமைநோய் அறவே களைந்தும்
சிறப்புற அனுப்புவீர் சீரார் நேம
நகரிற் குபேர நலம்படைத் தோரே!

## திருநெல்வேலிச் சைவர் சீர்கேட்டைப் பாடியது

முத்தப்பர் ஒருமுறை கார்த்திகை நாளன்று குன்றக்குடிக்குச் சென்று முருகனை வழிபட்டார். அப்போது அங்கே தேவாரம் பாடும் பணி செய்யும் சைவர்கள் இவரிடம் வந்து, ''ஐயா எங்கள் பேரில் ஒரு பாட்டுப் பாட வேண்டும்'' என்று வற்புறுத்தினுர்கள். எத்தனை மறுத்தும் கேட்காது போகவே, முத்தப்பரும் இவ்வாறு பாடி விட்டார்.

ஒருநெல் பிறர்க்குதவார் ஊர்முதலில் ஆசை
திருநெல்வே லிச்சைவர்க் கம்ம! — அருமையொடு
தம்பியென்றும் அண்ணனென்றும் தாம்பேசு வாரவரை
நம்பினுர் போதுமிக நன்று!

## அடைக்கலக் காப்பு

ஒருமுறை முத்தப்பர் தமது துப்பாக்கியை ஒரு உழவனிடம் கொடுத்து வைத்திருந்தார். முத்துப்பாலாண்டி மன்னன் என்ற சிற்றரசன் அதனையறிந்து, தனது ஆட்களை ஏவி உழவனிடமிருந்து துப்பாக்கியைக் கவர்ந்து சென்று விட்டான். துப்பாக்கியை இழந்த உழவன் உடனே முத்தப்பரிடம் வந்து முறையிட்டான். முத்தப்பரும் ஓர் ஓலையை எடுத்து ஒரு பாடலை எழுதி உழவன் மூலமே முத்துப்பாலாண்டிக்குக் கொடுத்தனுப்பினுர். பாடல் இது :

அடைக்கலத்தைத் தேவர்கள் ஆதரிப்ப தல்லாது
எடுக்கத் துணிந்தபேர் இல்லை; — திடப்புயனும
முப்பால் புகழவரும் முத்துப்பா லாண்டிமன்னு!
துப்பாக் கியைத்தரச் சொல்!

பாடலைப் படித்த முத்துப்பாலாண்டியும் 'பாடுவார் வசைக்கு நாம் ஆளாகக் கூடாது; அவர் பாடினுல் பலிக்கும்' என்பதை அறிந்து உடனே துப்பாக்கியை உழவனிடமே கொடுத்தனுப்பி வைத்தான் என்பர்.

## குடத்து விளக்கினை நிகர்த்தவை கூறுக

ஒருமுறை கற்றறிந்த பெரியவர் ஒருவர் முத்தப்பரோடு பலவாறு பேசிக் கொண்டிருக்கும்போது 'ஐயா! குடத்துக்குள் வைத்த விளக் கு!'

இந்த ஈற்றடிக்குப் பாடுங்களேன்' என்று கேட்டாராம். உடனே, பாடுவார்

நல்கான் தனமும் நடுச்சபையி லேயிருந்து
சொல்லாதான் கற்ற சுயகவியும்; — நில்லான்
மடத்துச்சன் யாசி மயல்கொளலிம் மூன்றும்
குடத்துக்குள் வைத்தவிளக் கு!

என்று பாடி முடித்து, அவரது பாராட்டினையும் பெற்றாராம்.

## வெற்றிலையால் வந்த வினை !

ஒரு சமயம் முத்தப்பர் ஓர் அன்பரிடம் வேண்டிய வரை வெற்றிலை கேட்டும் அவர் கொடுக்காமையால் மனம்நொந்து இப்படி ஒரு பாடலையும் பாடினார், அப்படியே நடந்து விட்டதாம்!

---

மாத்தானும் பட்டி வடகிழக்கு மூலையிலே
பூத்தானும் மால்கொடிக்கால் போட்டானும்; — சாத்தாகேள்
இட்டபயிர் தீய்ந்தே இலைகாய்ந்து மேகருகி
வெட்டவெளி ஆக்கி விடு!

## திருப்பதி வெங்கடாசலபதி மீது பாடியது

வடத்தானை அலர்மேலு மங்கை மேவும்
தடத்தானை பாஞ்சசன்ய சங்கம் ஏந்தும்
இடத்தானை அடியவரை எமன்பா லென்றுங்
கடத்தானை நினைக்குமெந்தன் கருத்துத் தானே!

---

## கூழுக்குப் பாடியது

அன்னங் கொடுக்கின்ற அழகக்கோன்
பெண்சாதி அழகம்மையே

உன்னை நினைப்பது எவ்விடங்
கண்டாய் உலகறியத்

தன்னை நினைப்பது ராமேஸ்
வரத்திலும் மதுரையிலும்

பொன்னம் பலத்திலும் காசியி
லுமுன்னைப் போதிப்பனே!

## சாத்தன் கருப்பன் உறவை ஒழிக்க வேண்டுமெனப் பாடியது

கூத்தன்கைப் பாசத்துக் குள்ளா னாலும்
கொடியரவம் நூற்றைம்ப தொடுபழகி னாலும்
பார்த்தன்கை அம்புக்கே எதிர்சென் றாலும்
பண்பற்ற சாத்தனவன் உறவைத் தள்ளு!

## நென்மேனிக் கண்மாய் மீனுக்குப் பாடியது

காரார் குழவி சௌந்தர நாயகி காமவல்லி
சீராரும் நேம செயங்கொண்ட சோழீசர் தென்னிளசை
தேனாறு பாயும்நென் மேனிக்கண் மாய்சிறு கெளிர்களுக்கே
கோனானும் செட்டியும் கூடாக் குழம்பு குணமிலையே!

## தாணிச்சாவூரணி பழநியப்ப ஐயாவுக்குப் பாடியது


கண்டனூர் மடத்துரையுங் கண்ணுதலார் மெய்யடியார்
காண வேண்டித்

தெண்டனிட்டு யாமெழுதும் சீட்டுவா சகமதனைச்
செப்பக் கேண்மின்!

அண்டர்பிரான் பொன்மாரி ஐங்கரர்க்கு அபிடேகம்
ஆன தாலே

வண்டுறையும் செவ்வந்தி மலர்க்குடலை ஒன்றனுப்பி
வைக்க வேண்டும்!

( தொடரும் )



1895 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் அரண்மனையில் எடுக்கப் பெற்ற அரிய புகைப்படம் இது. இடதுபுறம் அரச குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்ப் புலவர் பாண்டித்துரைத் தேவரும் வலதுபுறம் நமது 'ஆசுகவி' தேவகோட்டை வீர. லெ. சிந்நயச் செட்டியார் அவர்களும் உள்ளனர்.

---

தேவகோட்டை எல்லையில் உள்ள சிலம்பணியில் கோயில் கொண்டுள்ள சிதம்பர விநாயகர் மீது தேவகோட்டை 'ஆசுகவி' வீர. லெ. சிந்நயச் செட்டியார் அவர்கள் இயற்றிய நூறு பாடல்கள் கொண்டது 'சிலம்பைப் பதிற்றுப் பந்தந்தாதி' ஆகும்.

'முதற் கடவுளான விநாயகரே முன்னின்று முடித்து வைப்பான் என்று அவர் மீதே இதனைப் பாடுகின்றேன்' எனக் கூறுவது காப்பு.

# தேவகோட்டை சிலம்பைப் பதிற்றுப்பத்தந்தாதி

## காப்பு

சீரார் சிலம்பைத் திருநகரில்
சிதம்ப ரவிநா யகன்மீது
பாரார் பரவும் தமிழ்ப்பதிற்றுப்
பத்தந் தாதி பகரலுற்றேன்
நேரார் பிறர்க்குத் தனைநினைந்து
நிகழ்த்து நூலு நிரப்பியிடும்
ஏரார் கருணை அவன் முன்னின்(று)
இதனை முடிக்கும் இனிதென்றே.

நூல்

உலகம் எல்லாம் உணர்ந்தோதற்(கு)
ஒண்ணு ஒருவன் உற்ருர்க்குச்
செலவி லாத சிறப்பருளும்
சிதம்ப ரவிநா யகக்கடவுள்
இலகும் யானை எழில் வதனத்(து)
இறைவன் யாமும் எம்மவர்தம்
குலமும் வாழச் சிலம்பை யிடைக்
குலவி வாழ்ந்து நின்ருனே,

— வீர. லெ. சிந்நயச் செட்டியார், தேவகோட்டை

---

# அறப்பணிக் கழகங்கள்

நம்மினத்தில் பொருளாதாரக் குறைவு காரணமாக திருமணமாகாது இருக்கும் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கவும். திருமணத்திற்கு நிதி உதவி செய்யவும் கீழ்க்கண்ட அறப்பணிக் கழகங்கள். அமைப்புகள் நம்மிடையே உள்ளன. விரும்புவோர் அவற்றை அணுகிப் பயன் பெறலாம்.

சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்
127F செக்காலே ரோடு, காரைக்குடி-623 001

பிஞங்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்
127E, செக்காலே ரோடு, காரைக்குடி-623001 (போன்: 2442)

பேரா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்
127E, செக்காலே ரோடு, காரைக்குடி-623 001


மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம்
15, மார்த்தாண்டபுரம் முதல் வீதி, புதுக்கோட்டை-622 001

ஸ்ரீ விசாலம் சாரிடபிள் டிரஸ்ட் &
ஸ்ரீ அருணு சாரிடபிள் டிரஸ்ட்
7 117, ஓ. ஏ. தெரு, பள்ளத்தூர்-623 107
(போன்: செட்டிநாடு-72 & 108)

நகரத்தார் பெண்கள் திருமணக் கழகம்
கதிரகம், காரைக்குடி-623 002

நகரத்தார் ஐக்கிய சங்கம்,
88, பவளக்காரத் தெரு, சென்னை-600001

இவை தவிர பல நகரத்தார் சங்கங்களும் சில நகரக் கோயில்களும் நம் பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்தும் திருமண நிதி உதவி அளித்தும் வருகின்றன.



நாட்டரசன்கோட்டை அருள்தரு சிவகாமி அம்மன் உடனுறை அருள்தரு கரிகால சோழீஸ்வரர் திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 2—9—85 அன்று நடைபெற்றபோது கரிகால சோழீஸ்வரர் கருவறைக் கோபுரம் நன்னீராட்டப்பெறும் காட்சி.

தஞ்சைப் பெரிய கோயிலின் தெற்குப் பிரகாரத்தின் மத்தியில் அமைந்துள்ளது இந்த வராஹி அம்மன் ஆலயம். 'ஸப்த மாத்ரிகா' எனப்படும் ஏழு மாதாக்களில் இந்த வராஹி அம்மனும் ஒன்று. இராஜராஜன் போருக்குப் புறப்



படும் முன்பு இந்த வராஹியை வணங்கி விட்டுச் செல்வது வழக்கமாம். இதைச் சக்தி வாய்ந்த வெற்றித் தேவதையாகக் கருதினனும் அம்மாமன்னன். செவ்வாய், வெள்ளி தோறும் இந்த அம்மனை வழிபட பக்தர்கள் திரளுகிறார்கள்.

## கோவிலூர் மடாதிபதி பரிபூரணத்துவம் எய்தினர்

காரைக்குடிக்கு அருகில் உள்ள 96 ஊர் நகரத்தார்களுக்குச் சொந்தமான கோவிலூர் மடாலய ஆண்டவர் மன்றத்தின் தலைவர் அரு. இராமநாத ஞான தேசிக சுவாமிகள் சில நாட்கள் உடல் நலமில்லாதிருந்து 15—10—85 அன்று பரிபூரணத்துவமெய்தினர்



கள். இவர்கள் 10ஆவது மடாதிபதியாக 2—7—82 அன்று பட்டத்திற்கு வந்தவர்கள்.

இவர்கள் புதுக்கோட்டை மாவட்டம் அரிமளத்தில் பிறந்தவர்கள். வயது சுமார் 57. இவர்கள் பிள்ளையார்பட்டிக் கோயிலைச் சேர்ந்தவர்கள். இவர்களது அம்மான் (தாயின் சகோதரர்) சுமார் 45 ஆண்டுகள் காளையார்கோயில் மடத்தில் மடாதிபதியாக இருந்தவர்கள். அம்மான் அவர்களிடம் இவர்கள் கொண்ட ஈடுபாடு காரணமாக தமது 25ஆவது வயதில் துறவறம் மேற்கொண்டார்கள். இவர்களது 10ஆம் நாள் கிரியைகள் கோவிலூரில் 24-10-85அன்று நடைபெற்றன. அதில் பாதரக்குடி ஸ்ரீ ரவீந்திரநாத சுவாமிகள், சாதுக்கள் மற்றும் நகரத்தார் பெருமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## இயற்கை எய்தினர்

குருவிக்கொண்டான்பட்டி திரு. வ. பழ. ராம பெரியகருப்பன் செட்டியார் என்ற கருப்பையா செட்டியாரின் துணைவியார் திருமதி அழகம்மை ஆச்சி தமது 40 ஆவது வயதில் 7—10—85அன்று மதுரையில் இயற்கை எய்தினர். அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

திருமதி அழகம்மை ஆச்சி பி. அளகாபுரி சுப. வ. வள்ளியப்ப செட்டியார் அவர்களின் புதல்வியாவார்.

திருமதி அழகம்மை ஆச்சிக்கு 5 பெண்களும் 2 ஆண்களும் உள்ளனர்.

○ ○

## சண்முகம் செட்டியார்

மதுரை ருக்மணி ஆலையின் தலைவரும் தென்னிந்திய ஆலைகளின் சங்கத் துணைத் தலைவருமான எம். சண்முகம் செட்டியார் அவர்கள் தமது 55ஆவது வயதில் 15—10—85 அன்று அதிகாலை 2-30 மணிக்கு கோவை கே. ஜி. மருத்துவ மனையில் இயற்கை எய்தினர்கள்.

இவர்கள் கல்லலைச் சேர்ந்தவர்கள். ரோட்டரி மாவட்ட கவர்னராகப் பதவி வகித்தவர்கள். 'கலைத் தந்தை' கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் மாப்பிள்ளைகளில் ஒருவராவார்கள்.

இவர்கள் 1981 – 82ல் ருக்மணி சண்முகம் பாலிடெக்னிக்கை நிறுவினர்கள்.

இவர்களுக்கு மனைவி ருக்மணி ஆச்சியும் ஐந்து புதல்வர்களும் உள்ளனர்.



திருச்சி மாவட்ட மருந்து வணிகர் சங்க விழாவில் கலந்துகொள்ள கரூர் வந்த, கரூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. AR. முருகையாவை மாவட்ட மருந்து வியாபாரிகள் சங்க இணைச் செயலாளர் திரு. மேலே பழநியப்பன் மாலை அணிவித்து வரவேற்கும் காட்சி. மத்தியில் மாவட்ட மருந்து வணிகர் சங்கத் தலைவர் திரு வெங்கடேஸ்வரன்.

## இராஜாராம் சுவாமிகள் புதிய தலைவர்!

கல்லலைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ இராஜாராம் சுவாமிகள் காளையார்கோவில் க. செ. மடாலயத்திற்கும் மதுரை ஸ்ரீ குட்டைய சுவாமி மடாலயத்திற்கும் தலைவராக காளையார்கோவிலில் 23—10—85 அன்று காலை பதவி ஏற்றார்கள். இது ஆறாவது பட்டமாகும்.

தேவகோட்டை ஜமீன்தார் குடும்பத்தினரும் காளையார்கோவில் தேவஸ்தான சூப்பிரண்டெண்டு திரு எஸ்பி. சுப்பிரமணியமும், காளையார்கோவில் கிராம மக்களும் பெருந் திரளாக வந்திருந்து இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

சுவாமிகளுக்கு வயது 62; இவர்கள் இளையாத்தக்குடி கழனிவாசல் பிரிவைச் சேர்ந்தவர்கள்; காந்தீயவாதி; நல்ல இசை ஞானம் உடையவர்கள், கம்பன் அடிப்பொடி சா. கணேசனாரின் நெருங்கிய நண்பர். ஸ்ரீலங்காவில் சமயத் தொண்டாற்றியவர்கள். கல்லல் குருபூஜை மடத்தை நிறுவிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

## தேவகோட்டையில் கந்தர் சஷ்டி விழா!

தேவகோட்டை கந்தர் சஷ்டி விழாக் கழகத்தின் 40ஆம் ஆண்டு கந்தர் சஷ்டி விழா 11—11—85 தீபாவளி தினத்தன்று தொடங்கி 19—11—85 வரை 9 நாட்கள் வழக்கம்போல் முருகவேள் சதுக்கத்தில் நடைபெறவிருக்கிறது.

விழாவிற்கான ஏற்பாடுகளை கந்தர் சஷ்டி விழாக் கழகத் தலைவர் திரு எஎல். எஆர். வி. காளைராஜா செட்டியாரும் செயலாளர்கள் திரு. மெ. அருணாசலம், திரு. அள. சுப. பள. சுப. பழநியப்பனும் மற்றும் விழாக் குழுவினரும் ஆர்வத்தோடு செய்து வருகிறார்கள்.

## பாராட்டுகிறோம்

திரு சி. பழமலை, 22 வயது இளைஞர். புதுவயல் பெ. ப. வி, சித. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்களது புதல்வர் இளையாத்தக்குடிக் கோயில் பட்டணசாமி



பிரிவைச் சேர்ந்தவர். மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியின் B. B. A. இறுதி ஆண்டு மாணவரான இவர், மதுரை இளம் அரிமா (Leo) சங்கத்தின் தலைவராக இருந்து நல்ல பல சேவைகளைச் செய்து வருகிறார்.

பல நாட்டு நாணயங்களைச் சேகரிப்பதில் அதிக ஆர்வமுடைய இவர் தங்கம், வெள்ளி தவிர, மற்ற எல்லா உலோகங்களிலுமாகச் சுமார் 4,000 நாணயங்களைக் கைவசம் வைத்துள்ளார். ராஜ ராஜ சோழன், பாண்டியன், பல்லவன் காலத்து நாணயங்கள் தவிர திருவனந்தபுரம் சமஸ்தானக் காசுகளும் இவரிடம் உள்ளன. இவர் அகில இந்திய நாணயங்கள் சேகரிப்போர் குழுவின் உறுப்பினர்.

நாணயங்கள் சேகரிப்புக் கண் காட்சியில் 4, 5 முறை கலந்து கொண்டு தமது சேகரிப்புக்களை இவர் கண்காட்சிக்கு வைத்துள்ளார். அப்படிக் கண்காட்சிக்கு வைத்தபோது இவர் மதுரையில் 'Superb collection Award' பெற்றுள்ளார்.

இவர் கல்லூரிகளில் நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் பங்கு பெற்றுள்ளார். புகைப் படக்கலையில் வல்லுநரான இவர், கோவையில் தமிழ்நாடு அளவில் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் முதல் பரிசு பெற்றவர்.

## இயற்கை எய்தினர்

தேவகோட்டையைச் சேர்ந்த திரு. நவ. கண்ணப்ப செட்டியார் தமது 60 ஆவது வயதில் 30—7—85 அன்று ஈரோட்டில் இயற்கை எய்தினர். இவர் அமரர் திரு. தமிழ்வாணனின் தங்கையின் கணவர் ஆவார்.

# தீபாவளி

பிஆர். அருணசலம், கண்டனூர்.

முன் ஒரு காலம். வேதியர் ஓலம். நரகாசுரனின் நரபலித் தாகம். வெகுண்ட மக்கள் வெட்டப்பட்டனர். ஏனெனக் கேட்டவர்கள் நாவினை இழந்தனர். நலிந்தனர் மக்கள்! நாடினர் பரமனை! பாவம் மிகுந்ததால் பரமன் தோன்றினன். கீதையின் நாயகன் கிருட்டிணன் வந்தனன்!

அதனுல்,

பரிதி கண்ட பனியாக அசுரன் ஆனன்.
பாதம் பட்ட இடமெல்லாம் பட்டே போனன்!
மகுடி கேட்ட நாகமென மயங்கி வீழ்ந்தான்.
மழலையொடு கிழவருமே மகிழ்ந்தே வாழ்ந்தார்!

மொத்தத்தில்,

தீமை ஒழிந்ததால் — நன்மை மலர்ந்தது!
அரக்கன் மாய்ந்ததால் — அறம் பிழைத்தது!
நல்லவர் வாழ்த்தினுல் — பண்டிகை பூத்தது!
ஆம்!!
வழி வழியே வந்தவழி தீபாவளி! — அதனை,
வாழ்த்தி நாமும் ஏற்றிடுவோம் தீப ஒளி!!
தீபாவளி நன்நாளில், மக்கள் துயில் எழுவர்,
துன்பம் களைவர்! இருள் மறைந்ததால்—இன்பம் பெறுவர்!
வாய்க்கு ருசியாய் வாய்த்த பலகாரமும்,
தாய் தன் அன்பால் தந்த துணிமணியும்;
ஆலயம் போனதால் அகமிக நிறைவும்,
வீதியில் கண்ட வெடி பட்டாசும்,
தீபாவளியால் வந்த நல் விளைவே!... வளர்க!

முடிப்பு ;

தித்திப்பு! மத்தாப்பூ! ... குழந்தையர்க்குத் தீபாவளி!
தத்தளிப்பு! — தவிப்பு! — தம்பதியர் தீபாவளி!
நாளெல்லாம் திரைஅரங்கு — நல்லிளைஞர் தீபாவளி!
வண்ணத்துப் பட்டொன்றே — வனிதையரின் தீபாவளி!
ஏறுகின்ற விலையினிலே அசுரன் வரக் கண்டேன்
எப்பப்பா... கண்ணப்பா! உன் வரவு காண்பேன்?
ஏக்கக் கலி தீர்த்திடவே கருடன் மேல் வாவா!
ஏறுகின்ற விலைவாசி குறையவழி தாராய்!
இயல்பான அந்நாளே இந்தியர்க்குத் திருநாள்.
இனிப்பான அந்நாள்தான் தீபாவளிப் பொன்நாள்!

---

மதுரை- 625 009. கிருஷ்ணபுரம் 4வது குறுக்குத் தெரு, கதவு எண். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, கதவு எண். 25லிருந்து வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் வி. என். சிதம்பரம்.

Regd. No. TN / MA / (C) / 106 NAGARATHAR KURAL